விடுதலைப்புலிகள்

குரல் : 31 | ஆடி - ஆவணி 1992 | அன்பளிப்பு : ரூபா 5/-

# புலிகளின் சிறப்பு வேவுப்பிரிவு படைத்த வரலாற்றுச் சாதனை

## வடபிராந்திய படைத்துறை ஆணைப்பீடம் அழிக்கப்பட்டது

**எமது இயக்கத்தின் சிறப்பு வேவுப்பிரிவினர் (Special Unit - Military Reconnaissance) துணிச்சலுடன் வைத்த - நுட்பமான கண்ணிக்குள் சிக்கி, வடபிராந்திய அதிஉயர் தளபதிகள் மூவர் உட்பட ஒன்பது உயர்நிலை அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.**

**8.8.1992 அன்று, சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் அராலிப்பகுதியில் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித் தாக்குதலில், இச் சிங்களத் தளபதிகள் அழிக்கப்பட்டனர்.**

**வடதமிழீழத்தில் நடாத்தப்படும் படையெடுப்புக்களினதும், அதற்கான போர்முறைத்திட்டங்களினதும் சூத்திரதாரிகளாக மிக நீண்டகாலமாக இருந்துவரும் இந்த இராணுவ உயர் தளபதிகள் - ஒரே சமயத்தில், ஒன்றாக அழிக்கப்பட்டது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.**

**விடுதலைப் புலிகளின் சிறப்பு வேவுப் பிரிவினர் படைத்த இவ் வரலாற்றுச் சாதனை, பாரிய அரசியல் - இராணுவ திருப்புமுனைகளை ஏற்படுத்தும் என ஊகிக்கப்படுகின்றது.**

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமில்லாதவாறு சிங்களப் படை ஒரு பேரழிவைச் சந்தித்துள்ளது.

தமிழீழ மக்களுக்கெதிரான- குறிப்பாக வட தமிழீழத்திற்கெதிரான - இன அழிப்புப் போரைத் திட்டமிட்டு, வடிவமைத்து, முன்னின்று வழிநடாத்தும் சிங்கள உயர் இராணுவ தளபதிகளுள் முக்கியமானவர்களான, வடபிராந்திய ஆணைத் தளபதி லெப்ரினன்ற் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, யாழ். மாவட்ட தரைப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன, வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ஜயமகா உட்பட (சாவுக்குப் பின்பு பதவி உயர்த்தப்பட்டவர்கள்) சமர்க்களத்தில் படையினரை நேரடியாக வழிநடாத்தும் லெப்.கேணல் தரத்திலான மூன்று உயர் அதிகாரிகளும்,மேஜர் தரத்திலான ஒருஅதிகாரியும்,கடற்சண்டைகளை நேரடியாக வழிநடாத்தும் ஒரு லெப்ரினன்ற் கொமடோரும் (சாவுக்குப்பின் பதவி உயர்த்தப்பட்டவர்) ஒரு கடற்படை லெப்ரினன்றும் ஒரே சம்பவத்தில் - ஒன்றாக அழிக்கப்பட்டுள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த வீரசாதனையை, எமது இயக்கத்தின் சிறப்பு வேவுப்பிரிவினர் வெற்றிகரமாக நிறைவேற்றி, பாதுகாப்புடன் திரும்பியுள்ளனர்.

உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள இச்செய்தி, தமிழீழ மக்களுக்கு மகிழ்ச்சியையும் - உத்வேகத்தையும் கொடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டின் மீது ஒரு பாரிய படையெடுப்புக்கு சிங்களப்படைகள் தங்களைத் தயார் செய்துகொண்டிருந்த வேளையில், சிங்களப்படையின் கோட்டைக்குள் நுழைந்து அவர்கள் மத்தியில் ஒரு பேரழிவை ஏற்படுத்தி, படையெடுப்புத் திட்டத்தைச் சீர்குலைக்க விழைந்த எமது முயற்சி, பெருவெற்றி கண்டுள்ளது.

சிங்கள தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இப் பேரழிவு, சிறீலங்கா பாதுகாப்புப் படையைப் பொறுத்தளவில் என்றுமே ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

ஏனென்றால், இவர்களெல்லோரும் மிக நீண்டகாலப் போர் அனுபவம் மிக்க, மூத்த சிங்களத் தளபதிகளாவர்; படையினரைச் சமர்க்களத்தில் வழிநடாத்தி - சண்டையைத் தொடர்வதில், ஆளுமையும் தேர்ச்சியும் மிக்கவர்களாவர்.

லெப்ரினன்ற்ஜெனரல்டென்சில் கொப்பேகடுவவும், மேஜர் ஜெனரல் விமலரத்னவும், வடபிராந்திய கடற்படை றியர் அட்மிரல் ஜயமகாவும் எமது விடுதலைப் போர் முனைப்புப்பெற்ற காலத்திலிருந்து, வட - கிழக்குப் பகுதியிலேயே இருந்தபடி, புலிகள் இயக்கத்திற்கெதிராகப் போர்புரிந்து, விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கக் கங்கணங்கட்டியிருந்த சிங்களத் தளபதிகளாவர்.

அத்துடன், சிங்கள இராணுவ இயந்திரத்தின் முக்கிய தூண்களாக இவர்கள் இருந்துள்ளார்கள். வட பிராந்தியத்திற்கான சிங்கள கடற்படைத்தளபதி றியர்அட்மிரல் ஜயமகா, உலகின் பல நாடுகளில் சிறப்புப் போர்க்கல்வி பயின்ற ஒரு மூத்த தளபதியாவர். இத்துடன், எதிர்பார்க்கப்படும் யாழ். குடாநாட்டின் மீதான படையெடுப்பில், கடல்கடந்து துருப்பினரைக் குடாநாட்டுக்குள் தரையிறக்கிவிடும் பணிக்கு இவரே தலைமை தாங்க இருந்தார் என்று, 'வெரித்தாஸ்' வானொலி குறிப்பிட்டது.

சிங்களப் போர்வானின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்த இந்தத் தளபதிகளின் இழப்பால், சிங்கள தேசம் ஆடிப்போய் உள்ளது.

சிங்களப்படை சந்தித்துள்ள இப் பேரிழப்பு, சிறீலங்கா அரசின் இராணுவ இயந்திரத்தில் அடைக்க முடியாத ஒரு வெடிப்பை, ஏற்படுத்தியுள்ளது.

05-07-92 அன்று இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 ரக இராட்சத விமானத்தில் இருந்த, வான் படையின் உயர் அதிகாரிகளான ஸ்குவார்டன் லீடர் காசிர், லெப்ரினன்ற்கள் பெர்னாண்டோ, மெண்டிஸ், ஆகியோருடன், வானூர்தி அதிகாரிகளான விஜயக்கோன், பிரேமரத்ன, ரத்னாயக்க, சார்ஜன்ற் சில்வா, உட்பட 19 வான்படையினர் கொல்லப்பட்டனர்.

கடந்த ஏப்ரில் 28ஆம் திகதி தெல்லிப்பளையை நோக்கி சிங்களப்படைகள் நடாத்திய இராணுவ நடவடிக்கையின போது, சிறீலங்கா இராணுவத்தின் 5ஆவது தரைப்படைப் பிரிவின் துணைத் தளபதி லெப். கேணல் சூரியசேனனாயக்கா, மற்றும் முன்னணி தரைப்படை அதிகாரியான மேஜர் குலசேன உட்பட சில இடைநிலை அதிகாரிகளும் கொல்லப்பட்டிருந்தனர்.

இதே போன்று 9.6.92 அன்று பூநகரியில் எமது சிறப்புவேவுப்பிரிவினர்வைத்த கண்ணிவெடிக்குள் சிக்குண்டு, ஒரு இராணுவ வாகனம்

( 2 ஆம் பக்கம் பார்க்க )

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## புலிகளின் பின்னால் உலகத் தமிழர்கள்

**த**மிழீழ விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடுதலைப் போராட்டமாக மாறிநிற்கின்றது.

புலிகள் இயக்கத்தை உன்னதமான - ஆற்றல்கள் நிறைந்த - ஒரு போராட்டசக்தியாக உலகம் கணித்துவிட்டது. அத்துடன் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அர்ப்பண உணர்வும் நிறைந்த ஒரு விடுலை இராணுவத்திற்கு ஒரு உலக உதாரணமாக, புலிகள் இயக்கம் காட்டப்படுகின்றது.

சிங்கள ஆயுதப் படைகளினதும் இந்திய வல்லாதிக்கத்தினதும் இராணுவ - பொருளாதார இராஜதந்திர அழுத்தங்களுக்குத் தாக்குப்பிடித்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் எனும் கப்பலைத் தலைமைதாங்கி ஓட்டிச்செல்லும் ஒரு உன்னத தலைவனாக, ஒப்பற்ற போர்த் தளபதியாக தலைவர் பிரபாகரனை உலகம் கருதுகின்றது.

சிங்கள அரசும் அதன் ஆயுதப்படைகளும் பேரினவாத உணர்வுடன் தமிழீழ மக்களைப் பல்லாண்டுகாலமாக அடக்கி ஒடுக்கி வைத்திருக்கின்றது என்பதும், அது தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையை அமைதி வழிமூலம் தீர்க்க விரும்பவில்லை என்பதையும், பல மேலைத்தேய நாடுகளும், உலக நடுநிலை நிறுவனங்களும் உணர்ந்து கொண்டுள்ளன.

இதன் விளைவாக, தமிழீழ மக்கள் தமக்கென ஒரு தனியரசை அமைக்க நடாத்தும் ஆயுதப் போராட்டத்தின் அரசியல் நியாயங்களை, உலகம் புரிந்துணரத் தொடங்கியுள்ளது.

இவ்விதமாக, சர்வதேசரீதியாக புலிகள் இயக்கத்திற்கும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும், மதிப்பும் - கௌரவமும் உயர்ந்து வந்ததைக் கண்டு இந்திய ஏகாதிபத்தியம் உள்ளூரப் புழுங்கியது.

இந்த நிலையில், புலிகள் இயக்கத்திற்கு உலகரீதியில் ஏற்பட்டுவந்த பிரபல்யத்தையும் ஆதரவையும், சீர்குலைக்கும் நோக்குடன், மீண்டும் ஒரு முயற்சியை இந்திய அரசு எடுத்தது.

புலிகள் தடைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய தன்மூலம், புலிகள் இயக்கத்தின்மீதும் தலைவர் பிரபாகரன்மீதும் சேற்றை அள்ளி வீசி, புலிகள் இயக்கத்திடமிருந்து தமிழ் நாட்டு மக்களைத் தனிமைப் படுத்திவிட முயற்சிகள் எடுத்தது. தனது தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் பயன் படுத்தி, புலிகளுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டது. அத்துடன், புலிகள் இயக்கத்திற்குப் "பயங்கரவாத'' முத்திரை குத்தி, சர்வதேசரீதியாகவும் புலிகள் இயக்கத்தைத்தனிமைப்படுத்திவிட்டு, சிங்கள ஆரசுடன் இணைந்து புலிகள் இயக்கத்தை அழித்துவிட, திட்டம் தீட்டியிருந்தது.

புலிகளுக்கு எதிரான ஒரு சர்வதேசச் சூழலை உருவாக்க இந்திய அரசு முயன்ற அதே வேளை, சிங்கள அரசும் தனது முப்படைகளைப் பயன்படுத்தி தமிழீழம்மீது அடுத்தடுத்து பல இராணுவ நடவடிக்கைகளை நடாத்தி, புலிகளை அடிபணிய வைக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையில், எமது விடுதலைப் போராட்டம் ஒரு பெரிய நெருக்கடிக்குள் சிக்கி விட்டதாக நினைத்து, எமது மக்கள் அச்சமடைந்தார்கள். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு சிங்கள அரசின் நிரந்தர அடிமைகளாகத் தமிழீழ மக்கள் வாழப் போகின்றார்களா என்றொரு பயமும், மக்களிடம் ஏற்பட்டிருந்தது. அத்துடன், இந்தியாவின் பகைமை காரணமாக சர்வதேசத்திலிருந்தும் எமது போராட்டம் தனிமைப் படுத்தப்பட்டு விட்டதோ எனவும், மக்கள் அங்கலாய்த்தார்கள்.

இந்த இக்கட்டான நிலையிலும்கூட தமிழ்நாடு உட்பட உலகெங்கும் வாழும் தமிழர்கள், எமது போராட்டம் பற்றியோ எமது மக்களைப் பற்றியோ எந்தவித அக்கறையும் - அனுதாபமும் - காட்டாது வாழாதிருக்கின்றார்களே என்றொரு ஆதங்கமும், எமது மக்களிடம் குடிகொண்டிருந்தது.

ஆனால், இந்திய வல்லாதிக்கம் உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் புலிகள் இயக்கத்திற்கெதிராகத் தொடுத்த இராஜதந்திர - அரசியல் அழுத்தங்களையும், சட்டரீதியான தடைகளையும்மீறி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஆங்காங்கே புலிகள் ஆதரவுப் பேரணிகளை நடாத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு உட்பட உலகின் பலநாடுகளின் நகரங்களில், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். தலைவர் பிரபாகரனது உருவப்படத்தைத் தாங்கியவாறு, எமது போராட்டத்தின் நியாயங்களை உலகிற்கு எடுத்து விளக்குகின்றனர்.

புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தாலே கூட சிறைத்தண்டனை வழங்கப்படும் என இந்தியச் சட்டம் இடித்துக்கூறியும், தலைவர் பிரபாகரனை ஒரு பயங்கரவாதி போலச் சித்திரித்துக் காட்ட முயன்றபோதும்கூட, தமிழ்நாட்டில் தலைவர் பிரபாகரனது படங்களைத் தாங்கி புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான கோஷங்களை எழுப்பியவாறு, பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள், வீதிகளில் பகிரங்கமாக அணிவகுத்துச் செல்கின்றனர்.

இதே போன்று அண்மையில் இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து மற்றும் நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் புலிகள் ஆதரவுப் பேரணிகளை - கூட்டங்களை நடாத்தி, போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விதமாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் புலிகளின் பின்னால் அணிவகுத்து, போராட்டத்திற்கு உறுதி சேர்க்கின்றார்கள்.

இந்திய வல்லாதிக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்மீதுவிதித்தஅநீதியான - அநியாயமான - பழிவாங்கும் உணர்வுடைய - சுயநலமான தடை நடவடிக்கை, தமிழ் நாட்டுத் தமிழர்கள் உட்பட உலகத்தமிழர்களை, படிப்படியாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இச் சிந்தனைப்பொறி உலகத் தமிழர்களிடையே இங்கொன்றும் அங்கொன்றுமாக, தீப்பொறியாக மாறிவருகின்றது. இது அண்மைக்காலங்களில் உலகத்தமிழர்களிடையே ஏற்பட்டுவரும் இன எழுச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

உலகநாடுகளிலெல்லாம் தமிழர்கள் சிதறி வாழ்ந்துவந்தாலும்கூட, அந்நாடுகளிலெல்லாம் தமிழர்கள் ஒரு பலம் மிகுந்த சக்தியாகவே இருந்து வருகின்றார்கள். பொருளாதார - அறிவியல் துறைகளில் அவர்களின் பலம் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. இந்தப்பலம் ஒன்றுதிரண்டு புலிகள் இயக்கத்திற்கு உதவ முற்பட்டால், எமது விடுதலைப் போராட்டம் பாரிய வெற்றிகளைச் சந்திக்கும் என்பது, உண்மையிலும் உண்மை.

✻

## புலிகளின் சிறப்பு வேவுப்பிரிவு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிதறியது. அதற்குள் இருந்த கடற்படையின் உயர் நிலை அதிகாரியான லெப். கொமடோர் அஞ்சனா திசநாயக்கா, தரைப்படைத் தளபதிகளில் ஒருவரான கேணல் சித்ர புஞ்சிஹேவா, கப்டன் கருணரத்ன ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், 8.8.92 அன்று அராலியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில், சிங்களப்படையின் அதிஉயர் தளபதிகளான லெப்ரினன்ற் ஜெனரல் கொப்பேகடுவ, றியர் அட்மிரல் ஜயமகா, மேஜர் ஜெனரல் விமலரத்ன, லெப்.கேணல்கள் ஆரியரத்ன, பலிப்பான, ஸ்ரீபன், மேஜர் அல்விஸ், கடற்படை லெப்ரினன்ற் கொமடோர் லங்காதிலக, கடற்படை லெப்ரினன்ற் விஜயபுர ஆகியோரும் அழிக்கப்பட்டனர்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலுடன், வடபிராந்திய படைத்துறை ஆணைப்பீடம் (Northern Military Command Structure) முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது.

✻

# புலிகளும் மத சுதந்திரமும்

மதம் சம்பந்தமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? விடுதலைப் புலிகள் மதத்திற்கு விரோதமானவர்களா? மதவழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானவர்களா? மதம் பற்றி விடுதலைப் புலிகளின் சித்தாந்த கருத்துப் பார்வை என்ன? இவ்விதமாக மக்கள் மத்தியில் எழுப்பப்படும் கேள்விகளுக்குத் தெளிவான கொள்கை விளக்கத்தை அளிக்க முயல்கிறது இக் கட்டுரை.

மதம் சம்பந்தமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை, எமது கொள்கைத் திட்டப் பிரகடனம் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்குகிறது. அதில் கீழ்க்கண்டவாறு சொல்லப்படுகிறது:

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும். அதேவேளை சகல மதங்களையும் சார்ந்த மக்களினதும் அடிப்படை உரிமையான வழிபாட்டுச் சுதந்திரத்திற்கு, எமது இயக்கம் உத்தரவாதமளிக்கும். சகல மதத்தவர்களும் தமது ஆன்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும், மத-கலாசாரப் பண்புகளைப் பேணி வளர்க்கவும் எமது இயக்கம் ஊக்கமளிக்கும்".

புலிகளின் கொள்கைப் பிரகடனத்தில் இரத்தினச்சுருக்கமாகத் தரப்பட்டுள்ள இந்த விளக்கம், மதம் சம்பந்தமாக மூன்று முக்கிய அம்சங்களை முதன்மைப்படுத்துகிறது.

ஒன்று, மதசார்பற்றநிலை.
இரண்டாவது, மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம்.
மூன்றாவது, தமிழரின் தேசிய பண்பாட்டு வாழ்வு.

இந்த மூன்று அம்சங்களையும் இனி விரிவாகப் பார்ப்போம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மதசார்பற்றது எனும்பொழுது, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்ததாக நிற்கவில்லை என்பது தான் அர்த்தம் தமிழீழ மக்கள் தழுவிக்கொண்ட சகல மதங்களையும் அரவணைத்து, கௌரவித்து, சகல மதத்தவர்களுக்கும் பொதுவாக நின்று நடுநிலையைக் கடைப்பிடிப்பதுதான், மதசார்பற்ற நிலையாகும்.

தமிழ் இன ஒருமைப்பாட்டையும், தேசிய சுதந்திரத்தையும் இலட்சியமாக வரித்துக் கொண்ட ஒரு விடுதலை இயக்கம், மதசார்பான கொள்கையைக் கடைப்பிடிப்பது தவறானதாகும். இந்தக் குறுகிய மதவாதப்போக்கு தமிழ் இன ஒற்றுமைக்கும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டிற்தும் பெரும் முட்டுக்கட்டையாக அமையும். இதனைக் கருத்திற்கொண்டுதான் எமது இயக்கம், ஆரம்பகாலத்திலிருந்தே மதசார்பற்ற நடுநிலையைத் தழுவிக்கொண்டது.

சிங்கள அரசு மதசார்பானது. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு, அதாவது பௌத்த மதத்திற்கு தேசிய அந்தஸ்தும் கௌரவமும் வழங்கி, ஏனைய மதங்கள் சார்ந்த மக்களை அந்நியப்படுத்தியது. இந்தக் குறுகிய மதவாதப் போக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு வழிகோலி, சிங்கள தமிழ் தேசிய இன முரண்பாட்டைத் தீவிரமடையச் செய்தது. சிங்கள தேசத்து மதவாத, இனவாத ஒடுக்குமுறையைச் சந்தித்துநிற்கும் தமிழ்த் தேசிய இனம், மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பிளவுபட்டு நிற்கமுடியாது; அது எமது தேசியப் போராட்டத்தைப் பலவீனமடையச் செய்யும். எமது மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை வழிநடத்திச் செல்லும் விடுதலை இயக்கம் என்றவகையில் புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலையைத் தழுவி, மதங்களுக்கு அப்பால்நின்று இன ரீதியில் - தேசிய ரீதியில், எமது மக்களை அணிதிரட்டி ஐக்கியப்படுத்தும் அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது.

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கம் என்றரீதியில், நாம் எமது மக்களின் அடிப்படையான சுதந்திரங்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடிவருகிறோம். இதில் வழிபாட்டுச் சுதந்திரம் முக்கியமானது. இறை வழிபாடு மனிதர்களின் அடிப்படையான உரிமை. புனிதமான இந்த உரிமையை எமது இயக்கம் கௌரவிக்கிறது.

மெய்யுண்மையைத் தரிசிக்க விழையும் மனிதனின் ஆன்மீகத் தேடுதலானது, எல்லாக் காலங்களிலும் எல்லாச் சமூகங்களிலும் ஒரு முடிவில்லாத இலட்சியப் பயணமாகத் தொடர்கிறது. வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையும், பிரபஞ்சத்தின் அற்புதத்தையும் புரிந்துகொள்ள விழையும் மனிதத்தின் மிகவும் ஆழமான அபிலாசையாக, இந்த விழைதல் தொடர்கிறது. ஆன்மீகமும் சரி, விஞ்ஞானமும் சரி, இந்த விழைதலின் தோற்றப்பாட்டையே குறித்து நிற்கின்றன.

எந்த வழியிலோ, எந்த வடிவத்திலோ உண்மையைத் தேடும் உரிமை மனிதனுக்கு உண்டு. இது அவனது ஆன்மீக உரிமை. தனது ஆன்மீக அபிலாசைகளுக்கு திருப்திகாணும் வகையில் ஒரு மனிதன் சிந்திப்பதும், செயல்படுவதும், தேடுவதும், நம்புவதும் நம்பாமல்விடுவதும், வழிபடுவதும் வழிபடாமல் விடுவதும், அவனுக்கே உரித்தான தனிமனித சுதந்திரமாகும். இந்த வகையில் வழிபாட்டு உரிமையானது, மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்தைச் சார்ந்து நிற்கிறது. இந்த உரிமையை எமது விடுதலை இயக்கம் மதிக்கிறது; கௌரவிக்கிறது. ஏனென்றால் இது சுதந்திரமான மனித வாழ்விற்கும், உன்னதமான மனித வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

மத வழிபாடு எமது மக்களின் பண்பாட்டு வாழ்வுடன் இழையோடி நிற்கிறது. பண்பாட்டு வாழ்வு எமது தேசியத்திற்கு ஆதாரமானது.

**எமது இயக்கம் மத சார்பற்றது; எந்த ஒரு மதத்தையும் சார்ந்து நிற்காதது. அதாவது, எமது மக்கள் தழுவிக்கொண்ட சகல மதங்களையும் அரவணைத்து, கௌரவித்து, அவற்றுக்குப் பொதுவாக நின்று, நடுநிலையைக் கடைப்பிடிக்கும்.**

எமது தேசியம் ஒரு சுதந்திர அரச நிர்மாணத்திற்கு அத்திவாரமானது.

தேசிய உரிமைப்பாட்டின் அடிப்படையில், தன்னாட்சி கோரி ஒரு வீரசுதந்திரப் போரை நடத்திவரும் விடுதலை இயக்கம் என்றரீதியில், எமது மக்களை தேசிய ரீதியில் தேசிய மக்கள் சக்தியாக அணிதிரட்டுவது எமது அடிப்படை அரசியல் இலட்சியம். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதாயின் எமது தேசியத்திற்கு ஆதாரமாகவும், எமது தேசியக் கட்டுமானத்திற்கு தூண்களாகவும் விளங்கும் எமது பண்பாட்டு வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பது, அத்தியாவசியமானது. இந்த வகையில், தமது பண்பாட்டுக் கோலமாக எமது மக்கள் வரித்துள்ள மத வாழ்வுக்கு, நாம் மதிப்பளிக்கிறோம். அந்த மத வழிபாட்டு வாழ்வின் மேம்பாட்டுக்காக எமது இயக்கம் உழைக்கும்.

**எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியப் போருக்கு, மதங்கள் துணைநிற்க வேண்டும். இந்த சத்திய யுத்தத்திற்கு ஆதரவாக எமது மத நிறுவனங்கள் குரலெழுப்பவேண்டும். இது சகல மதங்களதும் தவிர்க்கமுடியாத தார்மீகக் கடப்பாடு ஆகும்.**

அடிப்படையான தனிமனித உரிமைகளும் சுதந்திரங்களும் பேணப்படும் சமூக உலகில் தான், மனித வாழ்வு சிறப்புறும்; முழு மனித விடுதலை சாத்தியமாகும்; மனிதமும் தர்மமும் தழைத்தோங்கும். தனிமனித சுதந்திரங்கள் பேணப்படாமல், சமூக நீதியுடைய சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பமுடியாது. தனிமனித தனித்துவத்தை மறுதலித்து பொருளுலகத்தைச்சீரமைக்கமுயன்ற சமூகப் பரிசோதனைகள் தோல்விகளையே சந்திக்க முடிந்தது.

தமிழீழ சமுதாயம் அந்நிய ஆதிக்கத் தளைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள விழைகிறது. விடுதலையை நோக்கிய இந்த விழைதல், மண் விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தனிமனித தமிழன் ஒவ்வொருவனும் தனது ஆன்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சுதந்திர தேசத்தைக் கட்டி எழுப்புவது தான் எமது விடுதலைப் புரட்சியின் இறுதி இலட்சியமாகும்.

வழிபாட்டு உரிமையைக் கௌரவித்து, எமது மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களுக்காகப் போராடும் எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியப் போருக்கு, மதங்களும் துணைநிற்கவேண்டும். ஒடுக்கப்பட்ட மனிதர்களின் விடிவிற்காக எமது தேசத்தில் ஒரு தர்மப்போர் நிகழ்ந்து வருகிறது. இந்த சத்திய யுத்தத்திற்கு ஆதரவாக எமது மத நிறுவனங்கள் குரலெழுப்பவேண்டும். சகல மதங்களதும் தவிர்க்கமுடியாத தார்மீகக் கடப்பாடு இது.

மக்களின் விடிவிற்காகத் தனது உயிரை அர்ப்பணிக்கும் ஒரு சுதந்திர வீரனின் தியாகமும் சாராம்சத்தில் புனிதமானது; ஒரு ஆழமான பரிமாணத்தில் ஆன்மீகமானது என்றும், சொல்லலாம். ✱

# அழியாத காலவடு

சிறுகதை

"அம்மா...... அப்பா எங்க......?" பள்ளிக்கூடத்தால் வந்ததும் வராததுமாக விஜிதா கேட்டாள்,

"உம்மோட விளையாடுறது தான் அப்பாவுக்கு நெடுகவும் வேலையே" அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், அவளைத் தூக்கி அணைத்து, வயிற்றில் முகத்தை வைத்துச் செல்லமாக அழுத்தினாள் அம்மா.

"பிள்ளை போய் உடுப்பை மாத்திக்கொண்டு வாங்கோ...... அம்மா வேலையா இருக்கிறன்". விஜியை இறக்கி விட்டு, அம்மா சமையற் கட்டுக்குள் போய்விட்டாள். அறைக்குள் சென்ற விஜிதா பழைய சட்டை ஒன்றுடன் வெளியில் வந்தாள். வழமையான செல்லப் பாய்ச்சல் ......

"அம்மா...... மாமாக்கள் வந்தவையே?" அம்மாவுக்கு அருகில் போயிருந்து மெதுவாகக் கேட்டாள் விஜி.

"மாமாக்களுக்கு வேற வேலை இல்லியே; உம்மைத் தூக்கிறதும், கொஞ்சுறதுமே வேலை?" அம்மா மகளுக்கு ஏற்றமாதிரி இராகமிழுத்தாள.

"வேற என்ன வேலை?" தனது உரிமையில் வேறு யாரோ தலையிடும் உணர்வு அவளுக்கு; அதனால்தான் அதிகாரத்துடன் வெடுக்கென்று கேட்டாள்.

"அவை, நாடு பிடிக்க வேணுமாம்". அம்மாவின் வார்த்லைதகளின் ஆழம் அவளுக்கு விளங்கவில்லை. ஆனாலும் தாயின் தோளைக் கட்டிக்கொண்டு ஒப்புக்குச் சிரித்தாள்.

அவளின் தொல்லையிலிருந்து எப்படித் தப்புவதென அம்மா திண்டாடிக் கொண்டிருந்தாள். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தவள்,

"முன்னுக்குப் போய் நிண்டு மாமாக்கள் வருகினமோ எண்டு பாரம்மா" என்றாள்.

அடுத்த கணம் அவளைக் காணவில்லை முன் திண்ணையில் நின்று அங்குமிங்கும் சென்று எட்டிப் பார்த்தாள். மாமாக்கள் வந்தால் அவளுக்குக் கொண்டாட்டம்தான். ஆனால் ... நீண்ட நேரமாக ஒருவரையும் காணவில்லை அவளுக்கோ ஓரிடத்தில் இருப்புக்கொள்ள முடியவில்லை. வேலிக்கருகில் சென்றவள் செத்தையைப் பிரித்து வெளியில் பார்த்தாள்.

'இந்தியர்கள்......' திரும்பி அம்மாவிடம் ஓடினாள்.

"அம்மா...... இந்திய......" அவளின் வாயைச் சட்டெனப் பொத்தியபடியே "சத்தம் போடாதையம்மா" என்று அடக்கினாள் அம்மா. உலகத்தின் இயக்கங்கள் எல்லாம் அப்படி அப்படியே நிற்க, அந்தக் கொடியவர்களின் பாதங்கள் மட்டும் அசைந்தன. வாழ்வின் தொடர்ச்சி அல்லது அழிவு என்பதில் எது முடிவென்று தீர்மானிக்கும் அந்தக் கணங்கள் கடந்து போயின. இன்று அழிவு இல்லை-ஆனால் வாழ்வின் தொடர்ச்சி...! அது நாளைய கேள்விக் குறி.

பொழுது சாய்ந்தது.

அப்பாவை இன்னும் காணவில்லை. கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் ஒரு மூலையிலிருந்தாள் விஜி.

அம்மாவோ யோசனையில் மூழ்கிப போனாள். சுவரில சாய்நதபடி முகட்டைப் பார்த்துக்கொண டிருந்தாள். அவளின் பார்வையில் உயிரில்லை.

"உடன வாறனெண்டுட்டுப் போனவர்...... மத்தியானம் சாப்பாடடுக்கும் வரேலை ..... பொழுதும் போட்டுது......' மனம் விடை கிடைக்காமல வெப்பத்தில் தகித்தது.

கருக்கல் நேரம், படலை திறந்து சத்தம் கேட்டது.

"ஆர்......?"

"அக்கா...... அண்ணையை அவங்கள் பிடிச்சுப் போட்டாங்கள். இந்தியன்ட காம்புக்குள்ள...... கொண்டு போட்டாங்கள்".

"அய்யோ". அம்மா பலமாகக் கதறி அழத் தொடங்கினாள். 'அவங்கள் பிடிச்சா......, மிருகங்களின் கைகளில மனிதர்கள் அகப்பட்டால்......' என்ன நடக்கும் என்பதை அவள் நன்றாகவே அறிவாள். அந்த முற்றத்தில் ஊர் கூடியது. இருளுககுப் பயநது விரைவாகவே கலைநதது.

உண்மைதான். அந்த நாட்களின் இரவுகள் கொடியன; மிகவும் பயங்கரமானவை. மனிதர்கள் வீதியில் இறங்கமுடியாது. அப்படியே இறங்கினாலும மறுநாளில்...... பாழ்க் கிணறொன்றிலோ அல்லது புதர் ஒன்றுக்குள்ளோ உயிரற்று......

நேரம் கடந்தது. அம்மாவின் அழுகை அடங்கி இருந்தது. இடை இடையே மட்டும் நடுங்கியபடி விம்மிவிம்மி அழுதாள்; பின்பு அடங்கினாள். விஜிகோ எதுவுமே விளங்கவில்லை. 'அம்மா ஏன் அழுகிறாள். அப்பாவை ஏன் பிடித்தார்கள்?' அம்மா அழும்போதெல்லாம் அவளும் அழுதாள். பின்பு அழுவதைக கைவிட்டு அம்மாவை இரக்கத்துடன் பார்த்தாள்.

"அம்மா...... அப்பாவை ஏன் பிடிச்சாங்களாம்" - அவளின் மனதிற்குள் குடைஞ்சு கொண்டிருந்த கேளவிக்கு அவள் விடை தேடினாள்.

"இந்த மண்ணை நேசிப்பதற்காக". விஜியை அணைத்துக் கொண்டு அமமா மீண்டும் அழுதாள். தனது பதில் அந்தப் பிஞ்சுக்கு விளங்காது என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் வேறு பதில் ஒன்றைச் சொல்ல வேண்டும் போல் அவளுக்குத் தோன்றவில்லை.

விஜி அம்மாவின் மடியிலேயே தூங்கிவிட்டாள். அம்மா விழித்தே இருந்தாள். இந்த இரவு மட்டும் ஏன் இப்படி நீள்கின்றது. 'விடிய வேண்டும்; மிக விரைவாகவே விடிந்துவிட வேண்டும்'; இதயம் ஏங்கித் தவித்தது.

▦ ▦

அடுத்தடுத்துப் போடப்பட்டிருந்த இரு கம்பிச் சுருள்கள் அந்த முகாமிற்கு எல்லையிட்டிருந்தன. அதற்கு உள்ளாக அருகில் தறிக்கப்பட்ட தென்னங்குற்றிகளால் அமைக்கப்பட்ட காவல் நிலைகள், அடுக்கடுக்காக இருந்தன. அவற்றுக்கு இடையில் ஒரு சிறிய குளக்கட்டுப் போன்று அமைக்கப்பட்ட மண்பிட்டிகள் அந்த மிருகங்களை நகரத்து மனிதர்களிடமிருந்து தனிமைப்படுத்தி வைத்திருந்தது.

"ஏய்......"

வாசலில் நின்ற சிப்பாய் ஒருவன் ஏதோ கேட்டான். அவனுக்கு என்ன சொல்வது; சொன்னாலும் என்ன விளங்கப் போகிறது.

"ஐயா..... என்ர அவரை......" அவள் சொல்லி முடிக்கமுதலே அவன் தலையாட்டினான். பலமாகக் கத்தி ஏதோ சொன்னான்.

'அவன் என்ன சொன்னான்?' அவள் தொடர்ந்து நடந்தாள். அவன் தடுக்கவில்லை. அவன் என்னத்தைச் சொல்லித் தொலைத்திருந்தாலும் பரவாயில்லை; தடுக்காமலிருந்ததே போதும்.

விஜிதாவோ பயத்தில் நடுங்கியபடி ஒடுங்கிப்போய் அம்மாவுடன் ஒட்டிக்கொண்டிருந்தாள் எதையுமே பார்ப்பதை வெறுத்து, பார்க்கக்கூடாது என்ற முடிவுடன் தலையைக் கவிழ்த்து, கண்களை இறுக மூடினாள். அதட்டும் ஒவ்வொரு குரலுக்கும் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். மீண்டும் கண்களை மூடிக்கொண்டே அம்மாவை இறுக அணைத்தாள்.



"உங்களுக்கிருக்கிற கடமை இந்த மண்ணில பிறந்தவன் என்ற முறையில எனக்கும் இருக்கிதப்பன்".

'அம்மா இந்தச் சனியன் பிடிச்ச இடத்துக்கு ஏன் வந்தவ; இதை விட்டு எப்ப வெளிய போகப் போறா......' என அவள் மனம் சினத்துடன் தவித்தது. ஆனால் அம்மாவோ மேலும் மேலும் உள்ளே போனாள்.

மிரட்டல்களும்...... பேச்சுகளும்...... அம்மா அழுதாள். விம்மி விம்மி அழுதாள். திரும்பவும் மிரட்டல்களும்...... பேச்சுகளும்...... முடிவாக அந்த அறையின் பலகணிக்கருகில் அவர்கள் நின்றனர்.

'அது யார்...... அப்பாவா......?'

அந்த மனிதர் எழமுயன்றார். முடியவில்லை. முன்னால் அவரின் மனைவியும் பிள்ளையும்...... அவர் எப்படி எழுந்தார்! மிருகங்களால் குதறப்பட்டிருந்த அந்த மனிதர் எப்படி நிமிர்ந்தார்......!

அம்மா பேசமுடியாமல் தவித்தாள். நெஞ்சை அழுத்திய துன்பம் தொண்டைக்குள் அடைத்தது. பேசத்தொடங்கியபோது அழுதாள். அழுதழுது கதைத்தாள்.

"ஏய் அழாதே .....!" தேச விரோதி ஒருவன் அதட்டினான். அது உண்மைதான். மனிதர்களுக்கு மட்டும் சொந்தமான அழுகைக்கு அங்கு என்ன வேலை!

அம்மா தனக்குள் சோகத்தை அடக்கினாள்; முடியாமல் விம்மினாள்; அவர்களிடம் பேச்சு வாங்கினாள்.

விஜிதாவோ நம்புவதற்கு மறுத்தாள். அது அப்பா இல்லை...... யாரோ. அது அப்பாவே இல்லை.

▦ ▦

மூன்று நாட்கள். கொடிய சிறை அந்த மனிதரை வதைத்து விட்டு வெளியே விட்டது.

அன்று வீடுமுழுவதும் ஒரே ஆரவாரமாக இருந்தது அம்மாவிற்கு அப்பாவுடன் கதைப்பதற்கு நேரமிருக்கவில்லை; ஒரே வேலை; ஓடி ஓடித்திரிந்தாள். விஜிக்கோ முகமெல்லாம் மின்னும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு அப்பாவில் ஏறுவதும் இறங்குவதுமாக அந்தச் சின்னச் சிட்டு துள்ளித் துள்ளித் திரிந்தது. தன்னுள் தோன்றும் சந்தேகங்களுக்கு எல்லாம் அப்பாவிடம் விடை தேடினாள். பதில் சொன்னதும் சிரிக்கவேண்டும் என்பதற்காக, பலமாகச் சத்தமிட்டுச் சிரித்தாள்.

அன்றைய இரவு ஊர் உறங்கியதும் மாமாக்கள் வந்தனர்.

"அண்ணை எனிக் கொஞ்சம் கவனமா இருங்கோ" என்றான் அவர்களில் ஒருவன்.

"தம்பி...... சாவுக்குப் பயந்தா எல்லோரும் ஒரு மூலையில இருக்க வேண்டியதுதான். ...."

"அதுக்குத்தான் நாங்களிருக்கிறம் அண்ணை".

"உங்களுக்கிருக்கிற கடமை இந்த மண்ணில பிறந்தவன் என்ட முறையில எனக்கும் இருக்கிதப்பன்".

அவர்கள் பேச்சை முடித்துக் கொண்டு புறப்பட்டனர்.

"அக்கா விஜி எங்கே......?" என்றான் ஒருவன்.

(11 ஆம் பக்கம் பார்க்க)




## உலக அரசியல் அரங்கில்

# தென்னாபிரிக்கா

இரண்டு கோடியே எண்பத்தைந்து இலட்சம் தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மனிதரான, தென்னாபிரிக்க தேசிய கொங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா மிக நீண்டகால சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு, 1990 பெப்ரவரியில் விடுதலையாகி வெளியே வந்தார்.

தென்னாபிரிக்காவின் வெள்ளை இன சிறுபான்மை இனவெறி ஆட்சிக்கெதிராக தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் நடாத்தும் போராட்டத்திற்கு, 27 வருடங்களாக உறுதியையும் அர்ப்பண உணர்வையும் இந்த மனிதர் கொடுத்தபடியுள்ளார்.

தென்னாபிரிக்க வெள்ளை இனவெறி அரசுக்கு, மனிதாபிமான ரீதியில் சர்வதேசம் கொடுத்த அழுத்தங்கள், மற்றும் உள்நாட்டு ரீதியாக எழுந்த நெருக்கடிகள் காரணமாகவும் இந்த விடுதலை நடந்தது.

தென்னாபிரிக்காவின் அயல் நாடுகளும் - அதேசமயம் வெள்ளை இனத்தவர்களின் ஆதிக்கப்பிடிக்குள் இருந்தவையுமான - மொசாம்பிக், அங்கோலா, சிம்பாவே, நமிபியா போன்ற நாடுகள் படிப்படியாக தமது தேசிய விடுதலையைப் பெற்று கறுப்பின மக்களின் ஆட்சியை நிறுவியுள்ளன.

இன்றும் வெள்ளை இனவெறியர்களின் கோட்டையாக இருக்கும் ஒரேயொரு ஆபிரிக்க நாடு, தென்னாபிரிக்காவாகும். இங்கேயும்கூட மெதுமெதுவாக வெள்ளை இனவெறி ஆட்சி சரிந்துவிழும்போக்கு வரலாற்றில் தவிர்க்கமுடியாததாக அமையும். ஆனால் அது எப்போது நிகழும், எப்படி நிகழும் என்பதை, அறுதியிட்டுக் கூறமுடியாது.

தென்னாபிரிக்காவில், இரண்டு கோடியே எண்பத்தைந்து இலட்சம் கறுப்பர்களை ஐம்பது இலட்சம் வெள்ளையர்கள் அடக்கி ஆண்டு வருகின்றார்கள். இவ் வெள்ளை இனத்தவர்களும், தென்னாபிரிக்காவில் வெள்ளை இனவெறி ஆட்சியின் சரிவை உணர்ந்தே உள்ளார்கள். எனினும் எவராலும் தடுத்து நிறுத்தமுடியாத இந்த வரலாற்றுப்போக்கை - இந்த எதிர்கால யதார்த்தத்தை - அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள்.

அங்கு கறுப்பின மக்கள் நடாத்தும், அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தை, முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி பி. டபிள்யு. போத்தா, படைபலம் மூலம் நசுக்கப் பல முயற்சிகளைச் செய்துவந்தார். இதனால் போத்தா சர்வதேச ரீதியாகச் கடுமையான கண்டனத்துக்குள்ளானார்; தென்னாபிரிக்க அரசும் சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப் பட்டுவந்தது.

இந்தச் சூழ்நிலையில், வெள்ளை இனவெறி ஆட்சியைத் தொடர்ந்தும் நிலைபெறச் செய்யவும் அதன் பொருட்டு கறுப்பினமக்களின் போராட்டத்தை நசுக்கவும், தென்னாபிரிக்க ஆட்சிபீடம் புதியதொரு யுக்தியொன்றைக் கையாளத் தீர்மானித்தது; அதற்காகச் சில இராஜதந்திர நகர்வுகளைச் செய்தது.

இதுவரைகாலமும், கறுப்பின மக்களுக்கெதிரான அடக்குமுறையை கொம்யூனிசத்திற்கெதிரான நடவடிக்கைகளாறே, தென்னாபிரிக்க அரசு அரசியல் நியாயம்கூறி வந்தது. ஆனால் இந்தப் பல்லவியைத் தொடர்ந்தும் பாடமுடியாத நிலை ஒன்று இன்று உள்ளது.

அதாவது, கொம்யூனிசத்தின் தாயகமான சோவியத்யூனியனது சிதைவும், கிழக்கைரோப்பிய நாடுகளில் சோசலிச ஆட்சிகளின் கவிழ்வும், எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் போராட்டங்கள் சிலவற்றிற்கு சோவியத்யூனியன் செய்துவந்த ஆயுத - பண உதவிகள் முழுமையாக நிறுத்தப்பட்டமையும் நிகழ்ந்த பின்னரும், உலகத்திற்கு கொம்யூனிசப் பூச்சாண்டி காட்டி கறுப்பின மக்களின் போராட்டத்தை அழிக்கமுடியாது என்பதை, தென்னாபிரிக்க ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

மேலும், இன்றுள்ள புதிய உலக ஒழுங்கிற்கேற்ப உலகின் தனிப்பெரும் வல்லரசான அமெரிக்கா, சர்வதேச அரசுகள் தொடர்பான தனது இராஜதந்திர அணுகுமுறைகளையும் தலைகீழாக மாற்றிவிட்டது.

இதுவரைகாலமும் இருந்துவந்த அணுகுமுறையான, தனது வழிக்கு வர மறுக்கும் உலக அரசுகளைத் தண்டித்து தனதுபக்கம் இழுக்கும் அணுகுமுறைகளை மாற்றி, இப்போது உதவிகள் புரிவதன்மூலம் அவ் அரசுகளைத் தனது கைகளுக்குள் வைத்திருக்க முயல்கின்றது. அத்துடன் தேசிய இனப்பிரச்சினை போன்ற உள்நாட்டு முரண்பாடுகள் உள்ள நாடுகளில் தலையிட்டு, இரு பகுதியினரையும் பேச்சுவார்த்தை - உடன்பாடு என்ற வரையறைக்குள் வரவைத்து, பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்காது இழுத்தடிப்பதன் மூலம் தொடர்ந்தும் தலையீடுகளைப் புரிந்து சம்பந்தப்பட்ட அரசுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தந்திரோபாயத்தையே, தற்போது அமெரிக்க இராஜதந்திரம் மேற்கொள்கின்றது.

இவ்விதமாக புதிய அரசியல் ஒழுங்கில் உள்ள இராஜதந்திர அணுகுமுறைகளுக்கு ஏற்றபடி, தென்னாபிரிக்க அரசியற்களத்திலும் இரண்டு புதிய மிதவாதப் போக்குடைய தலைவர்கள் இருக்கின்றார்கள்.

ஒன்று, தற்போதைய ஜனாதிபதி எவ். டபிள்யு. டி. கிளார்க். மற்றையவர் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா.

தென்னாபிரிக்காவில் சில அரசியல் - சமூக சீர்திருத்தங்களைச் செய்யத் தான் விரும்பியுள்ளதாக சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதன் காரணமாக, டி. கிளார்க் உலக நாடுகளில் கணிசமான நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

அதேபோல, ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் தலைவர் என்ற வகையிலும் தனது மக்களுக்காக மிக நீண்டகாலம் சிறையில்வாடிய உறுதிமிக்க மதிப்புக்குரிய மனிதர் என்ற வகையிலும், திரு. நெல்சன் மண்டேலா சர்வதேச சமூகத்திலும் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

உலக சமுதாயம் கொடுத்த அழுத்தங்களிலிருந்தும், தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் கொடுத்த நெருக்கடிகளிலிருந்தும் தென்னாபிரிக்க வெள்ளை இனவெறி ஆட்சியைத் தற்காலிகமாகப் பாதுகாக்கும் நோக்குடனேயே, திரு. நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டிருந்தார்.

இது போராட்டத் தீவிரத்தைத் தணித்து - முடியுமானால் மழுங்கடித்து - அதன்மூலம் வெள்ளை இன ஆட்சியாளர்களின் நலன்களைத் தொடர்ந்தும் நிலைபெறச் செய்யும் தந்திரோபாயங்களுள் ஒன்றாகும்.

இந்தக் கபட இராஜதந்திர அரசியலுக்கு மனிதாபிமான முலாம் பூசி, தென்னாபிரிக்காவிலும் ஜனநாயக மாற்றங்கள் நடைபெறுவதைப்போன்றதொரு தோற்றத்தை, தென்னாபிரிக்க அரசு சர்வதேசத்திற்குக் கொடுத்தது.

இதனால், தென்னாபிரிக்காவில் அமுலிலிருந்த கொரே - அநாகரிகமான - இனவெறிக் கொள்கை நீக்கப்பட்டு விட்டதைப்போன்ற ஒரு மாயை எழுந்தது.

கறுப்பின மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகிய ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் மீதான தடை நீக்கப்பட்டுவிட்டதைப் போன்றதொரு உணர்வு தோன்றியது.

தென்னாபிரிக்க அரசியல் அமைப்பில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படப்போகின்றன என்றொரு எதிர்பார்ப்புப் பிறந்தது.

இத்தகைய உணர்வலைகளின் விளைவாக, நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் தனது தீவிரப் போக்கை நிறுத்திக்கொண்டது.

நீண்ட காலமாகவே, தென்னாபிரிக்காவுடன் இராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்திருந்த உலக நாடுகள் பல தங்களது உறவுகளைப் புதுப்பித்துக்கொண்டன.

தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை விதித்த சர்வதேச நாடுகள் அதை விலக்கிக்கொண்டன.

(11 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி டி. கிளார்க்குடன் நெல்சன் மண்டேலா

மாற்றங்களை உருவாக்க முயலும் பேச்சுவார்த்தைகள் இறுதியில் தோல்வியில் முடியவேண்டும் என்ற கபட நோக்கத்துடன், ஏற்கமுடியாததும் நடைமுறைப்படுத்த முடியாததுமான திட்டங்களை வெள்ளை இனவெறி அரசு முன்வைத்தது. பேச்சுக்கள், சமரசங்கள்மூலம் தமது அரசியற் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியாது என்பதைக், கறுப்பின மக்கள் உணர்ந்துகொண்டுள்ளனர்.

# சிங்கள அரசின் இராணுவ வேலி

யூன் 28ஆம் திகதி தொடக்கம் ஆனையிறவு — வெற்றிலைக்கேணி பகுதியில் சிங்களப்படைகள் நடாத்திய பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நாம் எதிர்கொண்டிருந்தோம்.

குடாநாட்டுடனான தரைத் தொடர்பை முழுமையாகத் துண்டிக்கும் நோக்குடன், சிங்கள அரசு இந்த இராணுவ நடவடிக்கையைச் செய்தது.

விமானப்படை - கடற்படைகளின் உதவியுடன், பல்லாயிரக்கணக்கான துருப்பினரையும் நூற்றுக்கணக்கில் கவசவாகனங்களையும் டாங்கிகளையும் உபயோகித்து, தொன் கணக்கில் வெடி மருந்துகளையும் பயன்படுத்தி, வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரை, சுமார் 10கிலோமீற்றர் நீள இராணுவ வேலியைச் சிங்களப் படை அமைத்துள்ளது.

இந்த முயற்சியில் 100 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை சிங்களப்படை இழந்ததுடன், பல கவசவாகனங்களும் சில டாங்கிகளும் நாசமாக்கப்பட்டன. அத்துடன், மக்கள் மத்தியில் பாரிய அனர்த்தங்களைப் புரிந்துவந்த - 'சீனச் சகடை' என மக்களால் அழைக்கப்படும் -வை 8 ரக இராட்சத விமானம் இயக்கச்சிப்பகுதியில் பீப்பாய்க்குண்டுகளை வீசிக்கொண்டிருந்தபோது, சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. இதில் 19 விமானப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என, சிங்கள அரசு ஒப்புக்கொண்டுள்ளது; கொல்லப்பட்டுள்ளவர்களில் சிலர் அனுபவமும் விசேட பயிற்சியும் பெற்ற அதிகாரிகள் என்பதும், குறிப்பிடத்தக்கது.

முன்னைய 'விடுதலைப் புலிகள்' இதழில் குறிப்பிட்டிருந்ததைப் போல, சிங்கள அரசு தனது இராணுவ பலத்தைப் பயன்படுத்தி தமிழீழ நிலப்பரப்பைத் துண்டாடி, தமிழர் நிலத்தை அபகரிக்க - ஆக்கிரமிக்க முயல்கின்றது. அதன் மூலம் தமிழ்த் தேசியத்தைச் சிதைத்து விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குவதுதான், சிங்கள அரசின் அரசியல் நோக்கமாகும்

யாழ். குடாவை வன்னி நிலப் பகுதியுடன் இணைக்கும் தரைப் பாதையை மூடி, வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவுத்தளம் வரை ஒரு இராணுவ வேலியையும், வடதமிழீழத்தை தென்தமிழீழத்துடன் இணைக்கும் மணலாறு பகுதியை ஊடறுத்து ஒரு இராணுவ வேலியையும் அமைத்து தமிழர் தாயகத்தைத் துண்டாட, சிங்கள அரசு விரும்பியுள்ளது.

இதில் முதலாவது கட்டததை நிறைவேற்றுவதற்கென்று ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை எடுத்திருந்தது; அதற்குப் 'பலவேகய- 2' எனப் பெயரும் இட்டிருந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் சுண்டிக்குளம், கொம்படி மற்றும் ஊரியான் பாதைகளை மூடி, குடாநாட்டுடனான தரைப்போக்குவரத்தைமுழுமையாகத் தடுப்பதுதான். அதன் மூலம் புலிகளின் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தி, புலிகளை இராணுவ ரீதியாக பலவீனமடையச் செய்ய விரும்புகின்றது.

இந்த இராணுவ இலக்கை அடைவதன்மூலம், சிங்கள அரசு ஒரு அரசியல் நோக்கை நிறைவேற்ற எத்தனிக்கின்றது.

அதாவது, குடாநாட்டை பூரண இராணுவ - பொருளாதார முற்றுகைக்குள் வைத்து, போராட்டத்தின் மையம் எனத் தான் கருதும் யாழ். குடாநாட்டின்மீது பூரண உணவு - பொருளாதாரத் தடைகளை அமுல்செய்து குடாநாட்டை அடிபணியவைப்பதன்மூலம், விடுதலைப்போரின் வீரியத்தைக் குறைக்கலாம் என எண்ணங்கொண்டுள்ளது; அதன்மூலம், தமிழர்களின் அரசியற் சக்தியாக இருக்கும் புலிகள் இயக்கத்தை தமிழீழ அரசியல் அரங்கில் இருந்து அப்புறப் படுத்தவும் விரும்புகின்றது.

அதேவேளை இவ்வெட்டவெளிப் பிரதேசத்தில் புலிகளை மரபுவழிப் போருக்கு இழுத்து, தன்னிடமுள்ள பிரமாண்டமான படைக்கல சக்தியான எறிகணைகள் - ரவைகள் - பீரங்கிக் குண்டுகள் - விமானக் குண்டுகள் - டாங்கியிலிருந்து வீசப்படும் குண்டுகள் ஆகியவற்றைப் புலிகள்மீது தாராளமாகப் பயன்படுத்தி, இயன்றளவு புலிகளை அழிக்கும் தனது தந்திரோபாயம் வெற்றியளிக்குமென, இராணுவத் தலைமைப்பீடம் இந்த இராணுவ நடவடிக்கையில் எதிர்பார்த்தது.

சிங்கள அரசு செய்ய இருந்த இந்த இராணுவ நடவடிக்கையையும் அதன் இலக்குகளையும் அரசியல் நோக்கங்களையும், ஏற்கெனவே நாமும் அறிந்துவைத்திருந்தோம். அத்துடன், சிங்கள அரசின் இவ் இன அழிப்புத் திட்டத்தை சில இராணுவ தந்திரோபாயங்களையும் யுக்திகளையும் உபயோகித்து எதிர்கொள்ள, நாங்களும் தீர்மானித்தோம்.

அதாவது, எதிரி விரும்புவது போல இந்த வெட்டவெளிப் பிரதேசத்தில் முழுமையான ஒரு மரபுவழிப்போரில் தொடர்ந்து ஈடுபடுவதை, நாம் தவிர்க்க முயன்றோம். அதேசமயம், இராணுவ நகர்வுக்கு இழப்பும் - இடையூறும் ஏற்படுத்தும் நோக்குடன், புதுவகையான- எதிரி எதிர்பார்க்காத - தாக்குதல் தந்திரோபாயங்களை வகுத்திருந்தோம். தமிழீழத்தின் ஏனைய இடங்களில் பலவீனமான நிலையிலுள்ள இராணுவ இலக்குகளைத் தாக்கி அழித்து ,ஏராளமான படையினரைக் கொன்று, ஆயுதங்களைக் கைப்பற்றி, சிங்களப்படைக்கு பேரிழப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் இராணுவத் தலைமைப் பீடத்தைச் சிக்கலுக்குள் மாட்டி - குழப்பத்துக்குள் தத்தளிக்கவைத்து -அவர்களது திட்டங்களைக் கைவிடச்செய்ய, அல்லது சீர்குலைக்க முயற்சி செய்தோம்.

யூன் 25ஆம் திகதி, யாழ். நகர்ப் பகுதிமீது பாரிய தாக்குதலை ஆரம்பிக்கப்போவதாக அரசு தனது தொடர்பு சாதனங்கள்மூலம் பாசாங்குசெய்து - குடாநாட்டு மக்கள்மீது உளவியற் போரைத் தொடுத்துவிட்டு - 28ஆம் திகதி, வெற்றிலைக்கேணியில் தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.



வண்ணான்குளம் சிங்களப் படை முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்.

**சிங்களப் படைக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம், தனது ஒட்டுமொத்த இராணுவத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமலும் கைவிட முடியாமலும் திண்டாடும் ஒரு குழப்பகரமானநிலைக்குள், சிங்களப் படைத்துறைத் தலைமையைத் தள்ளியுள்ளோம்.**

வெற்றிலைக்கேணிக் கடலில் நங்கூரமிட்டிருந்த கடற்படைக் கப்பல்களும் மற்றும் விமானங்களும் குண்டுகளை வீச, வெற்றிலைக் கேணி முகாமிலிருந்து புல்லாவெளியை நோக்கி கவசவாகனங்கள் - டாங்கிகள் சகிதம் புறப்பட்ட படையினர்மீது, நாம் தாக்குதல் தொடுத்தோம்.

முதல்நாள் நடந்த சண்டையில் மிகப் பெரிய உயிர்ச் சேதத்தைச் சந்தித்து,பலகவசவண்டிகளும்தகர்க்கப்பட்டநிலையில், முன்னேறமுடியாது இராணுவம் முகாம் திரும்பியது.

அன்றைய சண்டையில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

பின்னர் மூன்றாம் நாள், மீண்டும் புல்லாவெளியைநோக்கி சண்டையை நடாத்தியபடி, ஒரு பாரிய நகர்வைச் சிங்களப்படை செய்தது. அன்றைய சண்டையில் தன்னில் பலரை இழந்து இராணுவம் புல்லாவெளிச் சந்திவரையும் முன்னேறியது. இம் மோதலில் எமது 6 வீரர்கள் வீரச்சாவெய்தினர்.

பின்னர் ஏழாம்நாள் - வெற்றிலைக்கேணியின் இன்னொரு முனையால் மண்டலாய் கோவிலை நோக்கிய ஒரு நகர்வைச் செய்தது. இச் சண்டையில் கவச வண்டி ஒன்று நொருக்கப்பட்டது; பல படையினர் கொல்லப்பட்டனர். ஏழுபுலிவீரர்கள் களப்பலியாகினர்.

அங்கிருந்து சரமாரியான எறிகணைத்தாக்குதல், விமானத்தாக்குதல் மத்தியில் இயக்கச்சியை நோக்கி இராணுவம் நகரத் தொடங்கியது. எமது வீரர்கள் தொடர்ச்சியான எதிர்த் தாக்குதலை நடத்திவந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் 05.07.1992 அன்று, முன்னேறிக் கொண்டிருந்த இராணுவத்திற்குதவியாக குண்டுகளை வீசிக்கொண்டிருந்த வை - 8 ரகத்தைச்சேர்ந்த இராட்சத விமானம் ஒன்று, எமது வீரர்களினால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அதன் சிதைவடைந்த பாகங்களையும் ஒரு இராணுவ வீரனின் சடலத்தையும் கைப்பற்றியிருந்தோம்.

பின்னர் 12ஆம் நாள் இயக்கச்சியைக் கைப்பற்ற இராணுவம் நடாத்திய சண்டையில் 20இற்குக் குறையாத இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; 2 டாங்கிகள் நாசமாக்கப்பட்டன; 18 புலிவீரர்கள் வீரச்சாவைச் சந்தித்தனர்.

இராணுவம் இயக்கச்சிச் சந்திவரைவந்து, அங்கே முகாமமைத்தது. அதேவேளை, இயக்கச்சியின் பின்புறத்தால் குறித்ததொகையுடைய இராணுவத்தினர் ஆனையிறவுத் தளத்தைச் சென்றடைந்தனர்.

வெற்றிலைக்கேணியிலிருந்து இயக்கச்சிச் சந்தி வரையிலான இந்தப் படை நகர்வில், 100 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைச் சிங்களப்படை இழந்துள்ளது; 10 கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன; 2 டாங்கிகள் நாசமாக்கப்பட்டன; வை - 8 ரக இராட்சத விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது - அதற்குள் இருந்த 19 விமானப்படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சண்டைகளில் 56போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இதேவேளை, சிங்களப் படைத்துறைத் தலைமையின் இந்த இராணுவத் திட்டத்தைச் சீர்குலைத்து அதை ஆட்டங்காணச்செய்ய, நாம் பல தந்திரோபாய நடவடிக்கைகளை எடுத்தோம்.

ஆனையிறவுப் பகுதியில் சமர் நடந்துகொண்டிருக்கும் அதேசமயம் 10.07.1992 அன்று,திருக்கோணமலையில் எமது வீரர்கள் நடாத்திய ஒரு பதுங்கித் தாக்குதலில், 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

# சாத்தியமாகுமா?

அடுத்த நாள், செட்டிகுளம் பகுதியிலுள்ள வண்ணான்குளம் இராணுவமுகாமைத் தாக்கி, 52இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று, 100இற்கும் மேற்பட்ட நவீன ஆயுதங்களையும் பல்லாயிரம் ரவைகளையும் கைப்பற்றினோம். 4 கவசவாகனங்கள் இந்தச் சண்டையில் நாசமாக்கப்பட்டன.

இயக்கச்சி கைப்பற்றப்பட்டு விட்டது. குடாநாட்டிற்கான தரைப்பாதை மூடப்பட்டுவிட்டது என்று இராணுவத் தலைமைப்பீடம் வெற்றிக்களிப்பில் மிதந்திருக்க, அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த இரு சம்பவங்களும் இராணுவத் தலைமைப்பீடத்துள் குழப்பத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குழப்பத்தையும் அதிர்ச்சியையும் மேலும் மேலும் அதிகரிக்கச் செய்யும்முகமாக, இன்றுவரை இராணுவத்துக்கு அடுத்தடுத்துப் பலத்த அடி விழுந்து கொண்டிருக்கிறது.

29. 7. 92 இல் மட்டக்களப்பிலும் திருக்கோணமலையிலும்நடந்த இரு தாக்குதல்களில், 35 இற்கு மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர்.

4. 8 92 அன்று வவுனியாவில், 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மேலும், 5. 8. 92 இல் மன்னாரில் நடந்த ஒரு தாக்குதலில், 4 படையினர் கொல்லப்பட்டனர்.

இவ்விதமாக சிங்களப்படை, இந்த வெற்றிலைக்கேணி - ஆனையிறவு இராணுவ நடவடிக்கையின் பின், வரலாற்றில் என்றுமில்லாதவாறு பாரிய உயிர்ச்சேதங்களையும் ஆயுத இழப்புக்களையும் சந்தித்து வருகின்றது.

வண்ணான்குளம் இராணுவ முகாம் தகர்ப்பானது, குறைந்த விலையுடன் எமக்கு கூடிய பயனைப் பெற்றுத்தந்த ஒரு வெற்றிகரமான தாக்குதலாகும்.

சுமார் 100 இராணுவத்தினரைக் கொண்டிருந்த இம் முகாம், 30நிமிடங்களில் தாக்கி அழிக்கப்பட்டு விட்டது.

இந்தத் தாக்குதலில் கனரக ஆயுதங்கள் எதையும் நாம் பயன்படுத்தவில்லை. புதிய தந்திரோபாயங்களையும் தாக்குதல் யுக்திகளையுமே பயன்படுத்தி, இந்த வீர சாதனையைப் புரிந்துள்ளோம்.

வன்னிப் பிராந்தியத்தில் கொக்காவில், மாங்குளம் முகாம்கள் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்னர் நடந்த மிகப்பெரிய முகாம் தகர்ப்பு இதுவென, கொழும்புப் பத்திரிகைகள் ஆதங்கத்துடன தெரிவித்தன.

இதில் முக்கிய விடயம் என்ன வென்றால், முன்னர் நடந்த கொக்காவில்,மாங்குளம் முகாம் தகர்ப்புக்காக நாம் செலுத்திய உயர் விலையைவிட, வண்ணான்குளம் முகாம் தகர்ப்புக்குச் செலுத்திய உயர் விலை மிகக் குறைந்ததாகும். அதேசமயம் பெற்ற பயன் அதிகமாக இருந்தது.

கொக்காவில் முகாம் தகர்ப்பிற்காக இரண்டு நாட்கள் முயன்று, 18 போராளிகளை இழந்து, 72 இராணுவத்தினரை அழித்து, 80 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தோம்.

மாங்குளம் முகாம் தகர்ப்பின் போதும் இரண்டு நாட்கள் போரிட்டு, 62 போராளிகளை இழந்து, 110 இராணுவத்தினரைக் கொன்று, 150 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தோம்.

வண்ணான்குளத்தில் 30 நிமிட தாக்குதலில் 7 போராளிகளை இழந்து, 52 இராணுவத்தினரைக் கொன்று, 100 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தோம்.

வெற்றிலைக்கேணி - ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள 12மைல் நீளமான இராணுவ வேலியைப் பாதுகாக்க,பல்லாயிரம் படைவீரர்கள் தேவைப்பட்டனர்.

வெற்றிலைக்கேணி - ஆனையிறவுப் பகுதிகளில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைக்காக, தமிழீழத்தின் மற்றைய மாவட்டங்களில் இருந்தும் இராணுவம் எடுக்கப்பட்டு,வெற்றிலைகேணி-ஆனையிறவுப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக வெற்றிலைக்கேணி-ஆனையிறவுப் பகுதிகளில் இராணுவம் அதிக பலம்பெற, மற்றைய மாவட்டங்களில் பல இடங்களில்இராணுவம் பலவீனமடைந்து காணப்பட்டது.

இப்பலவீனமான நிலைகளைக் கண்டுபிடித்து சிங்களப்படையினருக்கு அழிவுகளை ஏற்படுத்தியதன்மூலம், படைத்துறைத் தலைமையின் ஒட்டுமொத்த இராணுவத் திட்டத்தைத், தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தமுடியாதபடியும் அதைக் கைவிட முடியாமலும் திண்டாடும் ஒரு குழப்பகரமான நிலைக்குள்,இராணுவ பீடத்தைத் தள்ளியுள்ளோம்.

அதேசமயம், வெற்றிலைக்கேணி-ஆனையிறவு-இயக்கச்சிவரை நீண்டு கிடக்கும் இராணுவ வேலியைப் பாதுகாக்கும் பணியிட, தான் முன்னர் தீர்மானித்ததைவிட பெருமளவு இராணுவத்தினரை ஈடுபடுத்தவேண்டிய கட்டாயத்துள் இராணுவபீடம் இருக்கிறது.

இதனால், வேறொரு இடத்தில் இராணுவ நடவடிக்கையை நடாத்துவதல இராணுவபீடம் பல சிக்கல்களையும் அபாயங்களையும் எதிர்கொள்ளும் சாத்தியம் உள்ளது.

தொடரான பெரும்நிலப்பரப்புகளில் இராணுவம் நிலைகொள்ளும்போது, எம்மைப் பொறுத்தளவில் தாக்கப்படவேண்டிய இலக்குகள் அதிகரித்துள்ளன.

அதேசமயம், இராணுவத்தைப் பொறுத்தளவில் இதனால் தனது துருப்பினரைப் பாதுகாக்கும் திறமையை இழக்கின்றது.

இதன் காரணமாக இந்த இராணுவ வேலியை அகற்றவேண்டிய, அல்லது இடையிடையே முறித்து எடுக்கவேண்டிய கட்டாயமும் சிங்களப்படைக்கு ஏற்படலாம்.

இந்த நிலையில், வட-தென் தமிழீழத்தைத் துண்டாடும் முகமாக மணலாற்றில் இராணுவம் அமைக்க உத்தேசித்துள்ள இராணுவ வேலி பற்றி,இராணுவத்தலைமைப் பீடத்துள் கருத்து மோதல்கள் தோன்றியுள்ளன. இதனால், அம்முயற்சியை உடனடியாகத் தொடங்குவதில் இராணுவபீடம் தயக்கம் காட்டிவருவதை, அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரை அமைத்து முடித்த இராணுவவேலியால், சிங்கள அரசுக்கு இராணுவ ரீதியாகப் பெரிய இலாபம் இருப்பதாகச் சொல்ல முடியாது இன்னும் சொல்லப்போனால்,இது சிங்களப்படையினருக்கு பல தீமைகளைத்தான் கால ஓட்டத்தில் பெற்றுக்கொடுக்கப்போகின்றது.

புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கை எனக்கூறிக்கொண்டு, உண்மையில் குடாநாட்டு மக்கள் மீது உணவு,எரிபொருள்,பொருளாதாரத் தடைகளை முழுமையாக அமுல்படுத்தவே சிங்கள அரசு இந்த இராணுவ நடவடிக்கையைப் பயன்படுத்துகின்றது.

ஏனெனில், சிங்களப்படைகள் தமது முற்றுகையை எந்த இடத்தில் எந்த வடிவத்தில் இட்டாலும் அது புலிகளின் படைநகர்வைத் தடுக்காது என்பதும், சிறீலங்கா படைத்துறைத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இந்த நிலையில், குடாநாட்டிலுள்ள மக்கள் பயன்படுத்தும் ஒரேயொரு தரைப்பாதையைத் தடைசெய்வதன் உண்மையான நோக்கம், வெளிப்படுகின்றது.

மக்களை அடிபணிய வைத்து போராட்டத்தை நசுக்க முயலும் இராணுவவாத தந்திரோபாயத்தையே, இது காட்டுகின்றது.

இது இவ்வாறிருக்க, ஆனையிறவு -வெற்றிலைக்கேணி தரைப்பாதையைத் தடுக்க சிங்கள அரசு முழுத்த முயற்சியும், அதனால் இராணுவம் கண்ட பின்னடைவுகளும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான படையெடுப்பு என்னத்துவத சிந்தனைக்கு உட்படுத்தியுள்ளது.


இந்தப் பின்னடைவுகளின் எதிரொலியாக, கொழும்பு அரசியல் மட்டத்திலும் ஒரு குழப்பகரமான நிலை தோன்றியுள்ளது; படைத்துறைத் தலைமைக்குள்ளும் கருத்து மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

ஆனையிறவு - வெற்றிலைக்கேணி பாதையைத் தடை செய்தது புலிகள் மண்டியிட்டு விடுவார்கள் என்ற கற்பனையில் இருந்த கொழும்புக் கனவான்களுக்கு, அந்த இராணுவ நடவடிக்கை கொடுத்த அதிர் விளைவுகளும், புலிகளின் உறுதியும், ஒரு அரசியல் யதார்த்தத்தை உணர்த்துகின்றது.

அதாவது, இராணுவ நடவடிக்கைகள் படையெடுப்புக்கள்மூலம் புலிகளை வென்றுவிட முடியாது என்பதே அதுவாகும்.


இதேசமயம், இந்த இராணுவ நடவடிக்கையில் சிங்களப்படை சந்தித்த பின்னடைவுகள் காரணமாக,இராணுவ வீரர்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் மனஉறுதி குலைந்துள்ளது.

இதனால் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு குறைந்துள்ளது.இராணுவத்திலிருந்து விலகி ஓடும் தன்மை அதிகரித்துள்ளது. அத்துடன், தமது வீரர்கள் மீதிருந்த நம்பிக்கையையும் சிங்களத் தளபதிகள் இழந்துவருவதை, அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதன் எதிரொலிதான், மேலதிக நவீன படைக்கலன்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று, சிங்கள அரசைப் படைத்துறைத் தலைமை நிர்ப்பந்திப்பதாகும். ●



04-08-1992 அன்று, வவுனியாவில் சிங்களப்படைமீதான தாக்குதலின் போது எம்மால் கைப்பற்றி அழிக்கப்பட்ட 'பவள்' கவச வண்டி

**இராணுவ நடவடிக்கைகள், படையெடுப்புகள் மூலம் புலிகளை வென்றுவிடமுடியாது என்பதே, அரசியல் யதார்த்தமாகும்.**




தமிழீழத்தின் ஏனைய பகுதியிலிருந்து யாழ் குடாவைத் துண்டிக்க "இராணுவ வேலி" அமைப்பதற்காக, வெற்றிலைக்கேணி படை முகாமிலிருந்து மூன்று முனைகளால் சிங்களப்படை நகர்த்தப்பட்ட பாதை.

# கப்டன் சந்தியா




*1989,*

இந்திய இராணுவம் வீதிக்குவீதி முகாம் அமைத்து தமிழ் மக்களை வேட்டையாடிக் கொண்டிருந்த காலம்.

இந்த வேளையில்-எமது விடுதலைப் போராட்டமும் புதியதோர் பரிமாணத்தைப் பெற்றுக் கொள்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்டத் திறனையும், அவர்களது வீரத்தையும், தியாக உணர்வையும் உலகம் மேன்மேலும் தெரிந்துகொள்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் அழித்துவிடலாம் எனக் கனவு கண்ட இந்திய வல்லாதிக்கம், எம் மண்ணிலே வேர்விட்டுவிழுதெறிந்து நின்ற விடுதலைப் போரிற்கு முகங்கொடுக்க முடியாது மண் கவ்வியது.

இக்காலத்தில்தான் கப்டன் சந்தியா தன்னை இந்தப் போராட்டத்துடன் முழுமையாக இணைத்துக்கொண்டார்.

அவள் இப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது ஒன்றும் திடீர் முடிவு அல்ல. நீண்ட காலமாகவே அவள் எமது விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து நின்று, தன் பங்களிப்பை வழங்கி வந்தாள்.

1984 - 1987 காலப்பகுதியிலே 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பிலே இணைந்து செயற்பட்டாள். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து வேடிக்கை பார்த்த சமுதாயத்தில் இருந்து, விலங்குடைத்துப் புறப்பட்ட வீரவேங்கை இவள்.

பாலர் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்துகொண்டு சிறுவர்களின் கல்வியில் தனது கவனத்தைச் செலுத்திய அதே வேளை, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்து, கிராமரீதியாக பின்தங்கிய நிலையிலே வாழ்கின்ற மக்களது நலனிற்காக-குறிப்பாக கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்கள் போன்றோரின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்காக உழைத்தாள். இக்காலத்தில் இவள் செய்த வேலைகளை நாம் பட்டியலிட்டுக் காட்டுவது என்பது மிகவும் கடினமான ஓர் விடயம். அந்தளவு தூரத்துக்கு இரவு, பகல் என்று பாராது செயற்பட்டாள் சந்தியா.

இந்திய இராணுவம் எம்மண்ணில் நிலைகொணடிருந்த நேரத்திலே - இராணுவப் பயிற்சி பெறாத நிலையிலும் - மிகுந்த துணிவுடனும், மனநம்பிக்கையுடனும் செயற்பட்டாள். காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பது, போராளிகளுக்குத் தேவையான உணவு, மருந்து, போன்ற பொருட்களைப் பெற்றுக்கொடுப்பது போன்ற வேலைகளில் தனனுடைய தோழிகளையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டாள். இதேவேளை, போராளிகளின் 'நடமாடும் தொடர்பு சாதனமாகவும்' சந்தியா இருந்தாள்.

இந்நேரம்தான் சந்தியாவின் மனதை உலுக்கிய அந்தச் சம்பவம் நடந்தது. சந்தியா தன் உயிருக்குயிராக - தன் வாழ்க்கைத் துணைவனாக - நேசித்த மேஜர் சலாம், இந்திய இராணுவத்துடனான மோதல் ஒன்றின்போது வீரச்சாவைத் தழுவிக்கொள்கின்றார்.

துயரச் சுமை தாங்கமுடியாது சந்தியா துடித்தாள். இறந்தவர்களின் உடல்களுக்கு இறுதி மரியாதைகூட செலுத்த அனுமதியாத அந்நிய இராணுவத்தின் கொடுமை கண்டு குமுறினாள்.

தனது துயர் இந்த மண்ணுக்கு ஏற்படக்கூடாது. சொந்தங்களைப் பிரிந்து வாழுகின்ற அந்தச் சோகம் எமது மக்களுக்கு ஏற்படக்கூடாதெனில் எம் நாடு விரைவில் விடுதலைபெற வேண்டும் என, வேகம் கொண்டெழுந்தாள். 2ஆம் லெப். சாளினியையும் கூட்டிக்கொண்டு பயிற்சிப் பாசறை வந்தாள் சந்தியா.

சந்தியாவை முதன்முதலாக எமது போராளிகள் சந்தித்த அந்த நாளை, இப்பொழுதும் எங்கள் தோழிகள் அடிக்கடி நினைவு கூருவார்கள்.

1989 மாசி மாதம், மகளிர் படையணியின் 4 ஆவது பயிற்சி முகாமை நடத்துவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ தடைகளைத் தாண்டி பயிற்சிக்களம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் பெண்கள். சந்தியா பயிற்சிப் பாசறைக்குள் கால்வைத்த நேரம் போராளிகளின் சாப்பாட்டு நேரமாக இருந்தது. சமையல் பகுதியில் போடப்பட்ட மரக்கட்டைகளில் உட்கார்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், ஆளரவம் கேட்டு நிமிர்கிறார்கள். நிமிர்ந்த அனைவரதும் விழிகள் அப்படி..... அப்படியே ஒரு கணம் சந்தியாவில் தரித்து நின்றன.

ஆம்! நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத தோற்றம்... இவள்தான் கப்டன் சந்தியா.

எல்லோரது உதடுகளும் இப்பொழுது ஒரேயொரு சொல்லை மட்டும் உச்சரித்தது: ''ஹெவி வெப்பன்''. ஆம்! அவளுடைய தோற்றத்தினையும் அவளுடைய செயற்திறனையும், பார்த்து வியந்த எமது தலைவர், சந்தியாவைப்பற்றி பின்வருமாறுதான் கூறினார்: ''சந்தியாவினுடைய தோற்றத்திற்கு ஜி 3, எம் 16 அல்லது எஸ். எல் ஆர். என்பவை சரிவராது. இவவுக்கு 'ஹெவி வெப்பன்தான் கொடுக்க வேண்டும்''.

உண்மை. சந்தியா தனது பயிற்சியாலும், செயற்திறனாலும், தலைவரின் பாராட்டுரையைத் தனக்குரியதாக்கிக் கொண்டாள். முதன் முதலாக தலைவரிடமிருந்து '30 கலிபர்' சந்தியாவுக்கு வழங்கப்படுகிறது; அன்றிலிருந்து, அவளை யாரும் சந்தியா என்று அழைத்தது கிடையாது; 'ஹெவி வெப்பன் சந்தியா' என்பதே அவளுக்குரிய பெயராய் மாறிவிட்டது.



## கப்டன் சந்தியா

(யோகேஸ்வரி தேசிங்கம்)

கொட்டக்காடு, கரணவாய் மேற்கு, கரவெட்டி.

வீரப் பிறப்பு : 1967.09.29

வீரச்சாவு : 1992.06.18

*மண்டைதீவில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது, வீரச்சாவடைந்தார்.*

காட்டுக்குள்ளே தனது பயிற்சியைச் சந்தியா மேற்கொண்டிருந்த வேளை, வெலிஓயா இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு எம்மால் திட்டமிடப்பட்டது. இவ்வேளை தானும் சண்டைக்கு வர வேண்டும் எனச் சண்டையிட்டாள். இறுதியில் இவளும் இன்னும் சிலரும் உதவிப் படையணியாக அனுப்பப்பட்டனர். காயப்பட்ட போராளிகளையும், வென்றெடுக்கப்பட்ட ஆயுதங்களையும் சுமந்தபடி பாசறை திரும்பினாள். அன்றுதான் முதன் முதலாக இவளது பேராற்றல் எல்லோராலும் உணரப்பட்டது.

பயிற்சிக் காலத்தில் இவளுடன் கூடித்திரிவது என்பது எல்லோர்க்கும் மிகவும் விருப்பமான விடயம். தன் கண்முன்னால் ஒரு போராளி கஷ்டப்படுவதை இவள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள். எல்லோருடைய கஷ்டங்களையும் தானே சுமக்க முன்வருவாள். தன்னுடன் பாரம் தூக்க வருபவரிடம் எப்பொழுதும் சிறிய பொருட்களைக் கொடுத்தபின், பெரியமூடைகளைத் தான் மிகவும் இலாவகமாகத் தோளில் அடித்தபடியே, ''கொக்குளாய்க் காட்டுக்குள்ளே பெட்டியைத்தான் தூக்கவா'' என்று பாடியபடியே வருவாள்.

பாசறையில் கலகலப்புக்குப் பேர் போனவள் சந்தியா. சந்தியா இருக்குமிடத்தில் எப்பொழுதும் பாட்டுச் சத்தம் கேட்டபடிதான் இருக்கும். ''புதுயுகம் எழுகுது, பூவையரே விழித்தெழுக'' என்று ஒருபாடலை, தானே இசையமைத்துப் பாடினாள் சந்தியா.

எந்தவொரு கஷ்டமென்றாலும் அதனை வேடிக்கையாக்கி மகிழ்வது இவளுடைய இயல்பான சுபாவம். காட்டு வாழ்வின்போது அடிக்கடி குளிக்க முடியாது. ஆரம்பத்தில் எல்லோருக்கும் இதனைத் தாங்கிக் கொள்வது என்பது கஷ்டமாகத்தான் இருந்தது. குளிக்கத் தண்ணீர் இல்லாவிட்டாலும் முகமாவது கழுவவேண்டும் என்றபடி, மரங்களின் இலைகளில் தங்கி நிற்கின்ற சிலிர் நீரைக் கைகளால் தொட்டு எடுத்து, முகம் கழுவுவாள். இதுவே எல்லோருக்கும் வேடிக்கையாகவும் மனதைச் சமாதானப்படுத்துவதாகவும், அமைந்து விடும்.

காட்டுக்குள்ளே தனது பயிற்சி வாழ்க்கையை முடித்துக்கொண்டு ஊருக்குள் காலடி வைத்தபோது ஏற்பட்டிருந்த தற்காலிக அமைதியின்போது, தனது தோழிகள் ஒவ்வொருவருக்கும் சந்தியா சொல்லுவாள்: ''என்ன அம்மான் சிறீலங்கன் தமிழ் மக்களுக்குரிய நியாயமான தீர்வைநிச்சயம் வழங்குவான் என்று எதிர்பார்க்கிறீர்களா? இதுதான் அம்மான் ஆபத்தான காலம். போரும் இல்லாமல், சமாதானமும் இல்லாமல் தமிழ்மக்கள் ஏமாற்றப்படுகின்ற காலம். இதற்கு நாம் இடம் வழங்கக்கூடாது. எமது இலட்சியத்தில் உறுதியாக நிற்க வேண்டும்.''

மீண்டும் சிறீலங்கா தமிழ்மக்கள் மீதான இராணுவ வன்முறைப் போரைத் தொடர்ந்தபோது, கற்கோவளம் பகுதியில் குழுவொன்றின் தலைவியாகப் பொறுப்பேற்று நின்றாள்.

இவளது துப்பாக்கி எதிரிக்குப் பதில் சொல்லாத இடமே இல்லை என்று கூறலாம். அந்தளவு தூரத்துக்கு, எங்கெல்லாம் தாக்குதல் நடக்கிறதோ அங்கெல்லாம் சந்தியா நிற்பாள்; அவள் துப்பாக்கி எதிரிக்கு விடை தரும்.

பலாலி, கோட்டை, மாவிட்டபுரம், காரைநகர், ஆனையிறவு,... என்று இவளது தாக்குதற் பட்டியல் விரிந்து செல்லும்.

ஆனையிறவுச் சமரின்போது, இவள் ஜி. பி. எம். ஜி. வைத்திருந்தாள். அவள் அதைத் தோளிலே வைத்துக்கொண்டு செல்லும்போது ..... இப்போதும் எங்கள் கண்முன்னே, கோட்டை அதிர நடக்கின்ற சந்தியாவின் தோற்றம் நிழலாடுகிறது.

போதிய உணவோ நீரோ இல்லாத நிலையிலும் சோர்வடையாது நின்று, ஆனையிறவுச் சமரிலே சந்தியா போரிட்டாள். இத்தாக்குதலிலே மிகவும் நெருங்கிய தூரத்திலே எதிரியை எதிர்கொள்ளும் வேளையிலே, இவளது ஜி. பி. எம். ஜி. செயலிழந்து விடுகிறது. அந்த இடத்தில் சிறிதுகூட அவள் மனம் தளர வில்லை. தனக்கு அண்மையில் காயமடைந்த நிலையில் இருந்த ஆண் போராளி ஒருவரைத் தனது ஒரு தோளிலும், இன்னொரு தோளில ஜி. பி. எம். ஜியுமாக நடந்துவந்த தோற்றததைப் பார்த்த எமது தோழர்கள், ''உது சந்தியாவால்தான் முடியும்'' என்று வியந்தார்கள்.

தனது செயலிழந்த ஆயுதத்தைத் தனது ஆயுத உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரது ஆயுதத்தை எடுத்துக்கொண்டு, மீண்டும் சென்று மோதினாள். இந்நிலையில்தான், சந்தியா வயிற்றில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறாள்,

வைத்தியசாலையில் காயப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட எமது போராளிகள் சத்திரசிகிச்சை முடிந்த நிலையில், மயக்கம் முற்றாகத் தெளியாதநிலையில், களத்தில் நின்ற மனவேகம் குறையாது தன்னிலையில் கத்திக்கொண்டிருப்பார்கள், ஒவ்வொரு போராளியினதும் இதயதாகத்தை - அவர்களது உயிர் மூச்சை - இந்நிலையில் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம்

மயக்க நிலையில் சந்தியா கத்திக்கொண்டிருந்தாள்: ''அண்ணை என்னை விடண்ணை. நான் கரும்புலியாகப் போகப்போறன். என்னை விடண்ணை'' என்று, இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தாள்.

இந்த மனோபாவமும் வேகமும் தியாக உணர்வும் தான், இன்று எங்களது விடுதலைப்போரை உலக அரங்கிறகு எடுத்துக் காட்டியிருக்கிறது.

வைத்தியசாலையில் இவள் இதனைத்தவிர வேறெந்த நிலையிலும் கவலைப்பட்டதே கிடையாது. ''எனக்கு இதுவும் ஒரு காயமா'' என்றபடி, ஏனைய காயமடைந்த போராளிகளின் தேவையைக் கவனிப்பதில் ஈடுபடுவாள்.

மீண்டும் பல முனைகளிலும் சிறீலங்கா இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. எமது வீரர்களும் எதிரியை அழிக்காது விடமாட்டோம் என்ற ஆவேசத்துடன் நின்றனர். எதிரியை ஒரு அங்குலமேனும் நகர விடமாட்டோம் என்ற ஆவேசத்துடன், கோட்டையில் சந்தியாவின் குழு......

மண்டைதீவு இராணுவம் கோட்டையை நோக்கித் 'தாக்குதல் தொடுக்கும் நேரங்களில் எல்லாம் சந்தியாவைத்தேடி மக்கள்படை வந்து சேரும். சந்தியாக்கா எப்படி இருக்கிறா என்று பார்த்துப் போனால்தான் அவர்கள் மனம் ஆறுதல் அடையும். அங்கே...... போர்வரின் புளகித்துப்போய் நிற்பார்கள்; அவளின் அன்பான வார்த்தைகளால் நிறைவடைந்து மீண்டும் செல்வார்கள்.

( 11 ஆம் பக்கம் பார்க்க )

# போர்முனைச் செய்திகளில் சிறீலங்காவின் புளுகுகள்

*05-07-1992*

எமது இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரனான கப்டன் மில்லர் வீரச்சாவெய்தி, சரியாக 5 ஆண்டுகள். அந்த மாவீரனின் நினைவு நாளைத் தமிழீழம் நினைவுகூர்ந்திருந்தபோது-

வடக்கின் பெருநிலப்பரப்பிலிருந்து யாழ். குடாவைத் துண்டித்துவிடவென போரிட்டுக் கொண்டிருந்த சிங்களப் படைகளின், சீனத்தயாரிப்பான வை-8 ரக ராட்சத வானூர்தி ஒன்று, எமது வீரர்களின் துல்லியமான தாக்குதலினால் - சமர் முனையிலேயே - நடுவானில் சிதறடிக்கப் பட்டது. தமது தவறு காரணமாக '' குண்டு ஒன்று எதிர்பாராதவிதமாக வெடித்து '' அந்த '' விபத்து'' நிகழ்ந்தது என்கிறது, சிங்கள அரசு.

சிங்கள அரசின் பொய்ப்பிரச்சாரங்கள் பல நோக்கங்களைக் கொண்டது. சிங்கள மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருந்து தமது ஆட்சியைத் தொடருவது, சிங்கள இளைஞர்களைக் கவர்ந்து படைக்கு ஆட்சேர்ப்பது, '' உள்நாட்டு வன்முறையை ஒழித்து சமாதானத்தை நிலைநாட்ட '' என்று வெளிநாடுகளிடமிருந்து நிதிபெறுவது போன்றனவே, அவையாகும்.

கடந்த ஈராண்டுகாலப் போரில் முன்னரும் இரு தடவைகள், தனது வானூர்திகளை - சண்டைகளின் போது - புலிகளின் தாக்குதலால் சிங்களப்படை இழந்திருக்கின்றது.

முதலாவது சம்பவம்: யாழ். கோட்டைமீது கவிந்திருந்த எமது முற்றுகையை உடைக்கவென சிங்கள முப்படைகளும் இணைந்து, 13.09.1990 அன்று நடாத்திய திடீர் அதிரடித்தாக்குதலை எமது வீரர்கள் முறியடித்த சமரின் போது, வான்படையினரின் - இத்தாலியத் தயாரிப்பான 'சியாமார்செற்றி' ரக - குண்டுவீச்சு விமானம் ஒன்று, பண்ணைக் கடலுக்குள் சுட்டு வீழ்த்தப்பட்டது. இயந்திரக்கோளாறு காரணமாக அந்த விமானம் '' விபத்துக்குள்ளானது'' என்றது, சிறீலங்கா அரசு.

அடுத்த சம்பவம்: வன்னிப் பகுதியில் 'வன்னி விக்கிரம' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்த சிங்களப்படைகளுடன் எமது வீரர்கள் கடும் சமர் புரிந்துகொண்டிருந்தபோது, 16.06.1991 அன்று, வான்படையின் 'உலங்கு வானூர்தி' ஒன்றைச் சுட்டு வீழ்த்தினர். ஆனால் '' இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் அவசர தரையிறக்கம் செய்யப்பட்டபோது ஏற்பட்ட விபத்து '' என்றது, சிங்கள அரசு.

இந்த மூன்று சம்பவங்களிலும் சிங்கள அரசின் கூற்றை ஆழமாக நோக்குகின்ற எவரும், இவற்றில் காணப்படுகின்ற ஓர் ஒற்றுமையை அவதானிக்கமுடியும். இந்த மூன்று '' விபத்து '' களும் சமர்க்களங்களிலேயே நடந்திருக்கின்றன என்பதுதான் அது. நிச்சயமாக இங்கு ஒரு கேள்வி எழும். தனது தேவைகளுக்காக நிதமும் பறந்துதிரிந்த- எபபோதும் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த - இந்த வானூர்திகளுக்கு, அப்போதெல்லாம் விபத்து நிகழவில்லை; ஆனால், புலிகளுடன் சமரிடும் களங்களில் மாத்திரம் எப்படி அந்த ''எதிர்பாராத விபத்துக்கள்'' ஏற்பட்டன?

சிங்கள அரசின் பொய்ப் பிரச்சார வரலாறு மிக நீளமானது. 1987 இல் இந்தியப் படை வருகைக்குமுன் 'லங்கா புவத்' செய்தி நிறுவனம் மூலம் தான் வெளியிட்ட போலிச் செய்திகளை, இப்போது கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் முனசிங்கவுக்கூடாக சிங்கள அரசு செய்கிறது. அக்காலத்தில், புளுகுடன் பொய்யும் என்ற அர்த்தத்துடன் 'லங்கா புவத்' என்ற சிங்களச் சொல் தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இடையில் சிலகாலம் இதனையே அமைச்சர் ரஞ்சனும் செய்தார்.

யாழ். கோட்டைமீதான எமது முற்றுகையை முறியடிக்கவென, 13.09.1990 அன்று மண்டைதீவிலிருந்து ஒரு கடல்வழிப் படையெடுப்பைச் சிங்களப்படைகள் செய்தன. அந்த ஒரு பகல் நேரச் சண்டையின் முடிவில், 40 இற்கும் மேற்பட்ட சிங்களப் படையினரின் உடல்கள் கோட்டைக்கரைகளில் கிடந்தன. அவர்கள் வந்த 'ட்ரக்' வண்டி ஒன்று தகர்க்கப்பட்டது. குண்டுவீச்சு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்த முறியடிப்பு முயற்சியை, எமது 13 தோழர்களை இழந்து நாம் முறியடித்தோம். ஆனால் சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே கோட்டை முற்றுகை முறியடிக்கப் பட்டு. யாழ்நகரைப் படையினர் பிடித்துவிட்டனர் எனவும், தொடர்ந்தும் படையினர் யாழ் செயலகப்பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், அமைச்சர் ரஞ்சன் கொழும்பில் சொல்லிக்கொண்டிருந்தார்.

இதேபாணியிலேயே இப்போதும் 'பலவேகய- 2' நடவடிக்கையின் வெற்றிலைக்கேணிச் சமரின் முதலாம்நாள் சண்டையின் முடிவ்ல், தனது தரப்பில் ஏராளமானோர் கொல்லப்பட்டு கவச வாகனங்கள், டாங்கிகள் சேதமுற்று பலத்த இழப்பைச் சந்தித்து நின்றபோது, '' புலிகள் சண்டையிடத் திராணியற்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள்; புலிகளின் தலைவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள்; புலிகளின் சரித்திரம் முடிந்துகொண்டிருக்கின்றது: காடுகளுக்குள் தப்பி ஓடிய புலிகளை படையினர் தேடிக்கொண்டிருக்கின்றார்கள் '' என்று, அரசு கூறிக் கொண்டிருந்தது. ஆனால் படையினர் இயக்கச்சியை வந்தடைய 12 நாட்கள் சென்றதுடன், குறைந்தது 100 சிப்பாய்களின் உயிர்களையும் பல கவச வண்டிகள், டாங்கிகளையும், வான்படையின் வை - 8 ரக விமானம் ஒன்றையும், அது முழுமையாக இழந்தது. உலகில் சிந்திக்கக்கூடிய எவருமே, சிங்கள அரசின் பொய்ப் பிரச்சாரத்தை உணர்ந்துகொள்வார்கள்.

சிறீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரத்தை, அதன் விமானப்படையின் முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் ஹறி குணதிலகவின் கூற்றிலிருந்து அவதானிக்கலாம். அவர் சொல்கிறார்: ''அரசு தனது தரப்பு இழப்புச் செய்திகளை நம்பக்கூடியவாறு வெளியிடவேண்டும். அவற்றை உறுதிசெய்ய, செய்தியாளர்களைப் போர்முனைகளுக்குச் செல்ல அனுமதிக்கவேண்டும்.''

கடந்த வருடம் ஆனையிறவுப் பெருஞ்சமர் நடந்தபோது, சிறீலங்காவின் செய்திகளைத் தொடர்ந்து கேட்டுவந்த பிரித்தானியரொருவர், '' வெற்றிலைக் கேணியிலிருந்து முன்னேறுகின்றோம் என்று 22 நாட்களாகச் சொல்கிறார்களே, இத்தனை நாட்களுக்குள் லண்டனுக்கே வந்திருக்கலாமே? '' என்று கேட்டார். இது மட்டுமல்ல, இப்போது வெற்றிலைக்கேணியில் 'பலவேகய -2' நடவடிக்கை ஆரம்பித்த நாட்களில், '' சிறீலங்கா அரசு போரின் உண்மைத் தகவல்களை முழுமையாகத் தரும் என்பது சந்தேகமே'' என்று, பி.பி.சி வானொலி கூறியது. சிங்கள அரசின் பொய்ப் பிரச்சாரத்தை சர்வதேச அரங்கு எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கிறது என்பதற்கு, இவை சிறிய உதாரணங்கள்.

இவ்வாறு, 'முழுப்பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பதைப்போல' சிங்கள அரசு போர்முனையின் இழப்புக்களை மறைத்துவிடமுனைகின்றது - தனக்குச் சார்பான முறையில் செய்திகளைத் திரிபுபடுத்தி வெளியிடுகின்றது - தனது முப்படைகளும் சந்திக்கும் பேரிழப்புகளை மறைக்க முயல்கின்றது- புலிகளின் இழப்பை மிகைப்படுத்திக் காட்டுகிறது.

கடந்த வருடம் நடந்த ஆனையிறவுப் பெருஞ்சமரில் 2500 புலிகளைக் கொன்றதாக, சிங்கள அரசு தம்பட்டம் அடித்தது.

அதேபோல 'மின்னல்' என்று சிங்கள அரசு பெயரிட்ட மணலாறுச் சமரின்போது, 1000 புலிகளைக் கொன்றதாக அரசு கூறியது.

அதேபோல, தற்போது நடந்த ஆனையிறவு - வெற்றிலைக்கேணிச் சண்டையில் 500 புலிகளைக் கொன்றதாக, சிங்கள அரசு மார்தட்டியது.

இவ்விதமாக, புலிகள் இழப்புத் தொடர்பாக மிகைப்படுத்திக் காட்டிப் பிரச்சாரம் செய்து, சிங்கள மக்களுக்கும் வெளி உலகிற்கும் ஒரு மாயைத் தோற்றத்தைக் கொடுக்கச் சிறீலங்கா அரசு எத்தனிக்கின்றது.

இப் பொய்ப் பிரச்சாரத் தந்திரம் சிலநோக்கங்களைத் தன்னுள் கொண்டிருக்கின்றது; இதன்மூலம் சில விடயங்களைச் சாதித்துவிடலாம் என, சிங்கள அரசு எண்ணுகின்றது.

படிப்படியாகப் புலிகள் அழிக்கப்பட்டு சிங்களப்படைகள் யுத்தத்தில் வென்று வருகின்றன என்பதுபோல, ஒரு மாயையைச் சிங்கள மக்களுக்குள் ஏற்படுத்தமுயல்கின்றது. அதன்மூலம் தமது அரசு தான் சிங்கள தேசத்தின் காவலன்- சிங்கள தேசத்தின் பெருமையை நிலைநாட்டுபவர்கள் தாங்கள் தான் - என்று திரும்பத்திரும்பக் கூறி சிங்கள மக்களை நம்பவைத்து. சிங்கள தேசத்தின் பிரச்சினைகளைத் திசைதிருப்பி, தமது ஆட்சியைத் தொடர விரும்புகின்றார்கள்.

வெற்றிகளை மட்டுமே இராணுவம் சந்திக்கின்றது என்றவாறான செய்திகளின்மூலம் சிங்கள இளைஞர்களைக் கவர்ந்து, யுத்த முனைகளில் நிதமும் செத்துக் கொண்டிருக்கும் தனது துருப்புக்களின் இடத்தை நிரப்பச், சிறீலங்கா அரசு முனைகிறது.

மேலும், '' உள்நாட்டு வன்முறையை'' ஒழிப்பதில் தாம் படிப்படியாக வெற்றி பெற்றுவருகின்றோம் என்று வெளி உலகிற்குக் காட்டி, சமாதானத்தை நிலைநாட்ட என்ற போர்வையிலும், அபிவிருத்திக்கு - புனர் நிர்மாணத்துக்கு - என்ற பெயரிலும் நிதி உதவிகளைப் பெற்று, தனது இராணுவ பலத்தை உயர்த்தி, தமிழர்களின் விடுதலைப்போரை ஒடுக்க விரும்புகின்றது.

இதேசமயம், புலிகளாகிய நாம் எப்படி போர்முனைச் செய்திகளை வெளியிடுகின்றோம்?

சரியாக உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகளை வைத்துக்கொண்டு தான், எதிரி இராணுவத்தின் இழப்பை உலகிற்கு அறிவிக்கின்றோம். எதிரியின் பக்கத்தில் இழப்பு ஏற்பட்டாலும் எமக்கு ஆதாரங்கள் கிடைக்காத பட்சத்தில், எதிரியின் இழப்புகளை எண்ணிக்கை சொல்லிக் குறிப்பிடும் வழக்கத்தை நாங்கள் கடைப்பிடிப்பதில்லை.

எமது இழப்புகளை மக்களிடம் மறைத்து மக்களை ஏமாற்ற, நாம் விரும்பவில்லை. நாம் ஒரு மக்கள் இராணுவம். போராட்டம் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றது - அதன் நன்மை தீமைகள் என்ன- என்பதை உடனுக்குடன் மக்களுக்கு அறிவித்துக்கொண்டே இருக்கின்றோம்.

புலிகளாகிய நாம், சரியாக உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகளை வைத்துக்கொண்டுதான், எதிரிப் படையின் இழப்பை உலகத்திற்கு அறிவிக்கின்றோம். எதிரியின் பக்கத்தில் இழப்புகள் ஏற்பட்டாலும் ஆதாரம் கிடைக்காத பட்சத்தில், எதிரியின் இழப்பை எண்ணிக்கை சொல்லிக் குறிப்பிடும் வழக்கத்தை நாங்கள் கடைப்பிடிப்பதில்லை.

இந்த வகையில் போர்முனையிலும் ஒரு புதிய மரபை, புலிகளாகிய நாம் கடைப்பிடித்து வருகின்றோம்.

இலட்சியத்தில் - உறுதியில் - செயலில் - நாம் காட்டும் உண்மைத்தன்மையை போர்முனைச் செய்திகளிலும் வெளிப்படுத்தி, அப் புதிய மரபை வளர்த்தெடுத்து வருகின்றோம்.

# 116 நாட்கள்

## (15.04.92 - 08.08.92)

26 மார்ச் 1992 வர்த்தமானி அறிவிப்பின் மூலம், சிறீலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவால் கூட்டுப்படைத் தலைமையகத்தின் (Joint Operation Command) செயற்பாடுகள் இல்லாமற் செய்யப்பட்டன.

முப்படைத் தளபதிகளையும் காவற்துறை மா அதிபரையும் கொண்ட கூட்டுப் பாதுகாப்புப் படை (Joint Security Forces) உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னையது ஜே. ஓ. சி. என அழைக்கப்பட்டது; இப்போதையது ஜே எஸ். எவ். என அழைக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டுப் பாதுகாப்புப்படை, மூத்த மேலாளரான வான்படைத் தளபதி எயர் மார்சல் குணவர்த்தனா தலைமையில் செயற்படும்.

முன்னரைப் போலல்லாது இப்போது முப்படைகளின் தளபதிகளே நேரடியாக முடிவுகளை எடுப்பதால், சமர்க்களத்தை வழி நடாத்துவது சுலபமாக இருக்கின்றது என, கருத்து வெளியிட்டுள்ளார்கள்

நிலைகளைப் பாதுகாப்பதுடன், புலிகளையும் பலவீனமடையச் செய்யலாம் என இராணுவத் தலைமைப்பீடம் கருதுகின்றது.

22 திங்கள்களாகக் கூட்டுப்படைத் தலைமையகம் (ஜே. ஓ. சி.) செய்ய முடியாமல் போனதை, புதிய கூட்டுப் பாதுகாப்புப் படைச் செயலகம் செய்யப்போகின்றதென, சிங்கள அரசு மார்தட்டுகின்றது.

யாழ். குடாநாடு சிங்களப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்ற கோட்பரப்புகளுடன், பெரும் இராணுவ நடவடிக்கைகளும் தொடர்ந்தன

னாரில் 2 தமிழர்களும் சிங்களப் படைகளினால் கொலலப்பட்டுள்ளனர்.

இவ்விதம் சிங்களப்படை தான் பாரிய இழப்புகளைச்சந்தித்து,தமிழ் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்திச் சாதித்தது என்ன என்று சொல்ல, பெரிதாக ஒன்றுமில்லை.

இழந்துங்கூட, ஏன் சிறீலங்கா போரைத் தொடர விரும்புகின்றது?

ஒன்று,ஜே. வி. பியை அடக்கியது போல எபபடியாவது புலிகளை அடக்கிவிடலாம் என்ற, பிழையான கணிப்பீட்டில் எழுந்த ஒரு எதிர் பார்ப்பு.

அடுத்தது, அதிகாரப் போட்டியும். அரசியல் நிர்ப்பந்தங்களும் ஆகும்.

பிரேமதாசா, சிறீலங்காவில் தனக்கு அரசியல் நெருக்கடி தோன்றும்போது அதைத் திசை திருப்ப, தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிடுகின்றார்.

படைத்தளபதிகளுக்கோ, மற்றைய தளபதிகளை விடத்தாம்

**இக் குறுகிய காலத்தில் இக் கூட்டுப் பாதுகாப்புப் படைச் செயலகம், 272 இற்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்றுள்ளது.**

சிங்களத் தளபதிகள் கருதியது போல, மற்றைய இடங்களிலிருந்து புலிகள் வராவிட்டால் புலிகளால் போராடமுடியாது என்ற கருத்து சரிவரவில்லை.

தொடர்ச்சியாக புலிகள்மீது தாக்குதல் நடாத்தினால் இராணுவ நிலைகளைப் புலிகள் தாக்காது தடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பும், நிறைவேறவில்லை.

புலிகள் பலவீனமாக இருக்கின்றார்கள் என்ற ஊகமும் மெய்யாகவில்லை.

இராணுவம் தன் தங்ககங்களை (முகாம்கள்) கூட்ட இராணுவத்திற்கு இழப்புகள் கூடும் எனபது, சிங்களத் தளபதிகளுக்கே நன்கு தெரியும்.

இவ்வளவு இராணுவத்தையும் இராணுவ தளபாடங்களையும்

திறமைசாலிகள் - சாதிக்கக்கூடியவர்கள் - என்று நிரூபிக்கச் சந்தர்ப்பம் வேண்டும். அத்துடன் ஆளுக்காள் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியில் வெல்வதற்காகவும், போரை நீட்டிக்கொண்டே இருப்பார்கள். சிலர் ஆயுத பேரம், மற்றும் ஊழல்கள்மூலம் பணம் சேர்க்கலாம் என்பதாலும், போரைத் தொடர விரும்புகின்றனர்.

அரசியல் - இராணுவ நிர்ப்பந்தங்களுக்காகவும் தெளிவாகத் தெரிகின்ற பிழையான கணிப்பீடுகளுக்காகவும், வெல்ல முடியாத-முடிவில் தோல்வியையே காணப் போகின்ற- இந்தப் போருக்காக, எவ்வளவு சிறீலங்காப் படையினரைச் சிறீலங்கா அரசு பலி கொடுக்கப் போகின்றது? ; எவ்வளவு தமிழ் மக்களைக் கொல்லப் போகின்றது? ✻

**இந்த 116 நாட்களில் வடமாகாண தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, கப்பற்படை உயர் மேலாளர் கொமடோர் மொகான் ஜயமகா, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட 586 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.**

இதே சமயம், சிங்களப்படையணிகள் பலவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவத்தினரைக் கொண்டு, ஒரு சிறபபுப்படை அணியை இராணுவபீடம் அமைத்துள்ளது. இது எந்த நேரத்திலும், எங்கும் சென்று சண்டைகளில் ஈடுபடும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

15 ஏப்ரில் 1992 இல், நல்ல நேரத்தில் தமது கூட்டுப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தை (ஜே. எஸ். எவ்.)கொழும்பில் திறந்தனர். அதன்பின்பு அனுராதபுரம் மகா போதிக்குச் சென்று, தமிழர்களுக்கு எதிரான போரை வெல்ல ஆசீர்வாதமும் பெற்றனர்.

அதன்பின், மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஏப்ரில் 15 இல நடாத்தினர்.

ஆனால் 28 மே 1992 இல்தான், இவர்கள் தமது மாபெரும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கத் திட்டம் தீட்டினர்.

ஐந்து முனைகளில் சமரைத் தொடங்கத் தீர்மானித்தனர். முல்லைத்தீவு, தொண்டமானாறு, தெலலிபபளை, மன்னார்,வவுனியா ஆகியனவே அந்தச் சமர் முனைகளாகும்.

'கிறீன்பெல்ட் -3', 'பலவேகய - 2', 'சண்டமாருதம்', 'சத்பல' எனப் பல்வேறு பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த ஜே. எஸ். எவ். உருவாக்கப்பட்ட கடந்த ஏப்ரில் 15 இலிருந்து ஓகஸ்ட் 8 வரை ,426 இராணுவத்தினரை இழந்துள்ளதாகச் சிங்களப் படை தெரிவித்துள்ளது. அதே வேளை, 1380 இற்கு மேற்பட்ட புலிகளைக் கொன்றுள்ளதாகவும் கூறியுள்ளது.

ஆனால் இந்த 116 நாட்களில் வடமாகாண தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, கப்பற்படை உயர் மேலாளர் கொமடோர் மொகான் ஜயமகா, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட 586 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நாட்களில் இராணுவத்திடமிருந்து தானியங்கித் துப்பாக்கிகள் - 300, இலகு இயந்திரத் துப்பாக்கிகள் - 25, எம். 203 பிஸ்ரல் -5, ஆர். பி. ஜி - 4, 60 மி.மீ.மோட்டர் - 4, 81 மி. மீ. மோட்டர் - 1, எல் 3 - 2 உட்பட 340 ஆயுதங்களுக்கு மேல் எம்மால் கைப்பற்றப்பட்டன,

**வெல்ல முடியாத - முடிவில் தோல்வியையே காணப் போகின்ற - இந்தப் போருக்காக, எவ்வளவு சிறீலங்காப் படையினரை சிறீலங்கா அரசு பலிகொடுக்கப் போகின்றது?; எவ்வளவு தமிழ் மக்களைக் கொல்லப் போகின்றது?**

அதேநேரம் தென்தமிழீழத்திலும் இராணுவ நடவடிக்கையை நடாத்துவது என்று தீர்மானித்தனர்.

எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் சண்டைகளைத்தொடங்கினால், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு புலிகள் தங்களது படைப்பலத்தை நகர்த்த முடியாது எனக்கருதியே, சிங்களத் தளபதிகள் இத் தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்தனர்.

அத்துடன் தொடர்ச்சியாகப் புலிகளைத் தாக்காது விட்டால் அவர்கள் ஒன்றுசேர்ந்து இராணுவ நிலைகளைத் தாக்குகின்றார்கள்; எனவே, பல இடங்களில் ஒரே நேரத்தில் புலிகள்மீது தாக்குதல் தொடுப்பதன்மூலம் இராணுவ

இதுதவிர சிங்களப்படை, 22 கவச வாகனங்களையும் 4 தாங்கிகளையும் இழந்துள்ளது. அத்துடன், மிகப் பெரிய வை - 8 ரக வானூர்தியையும் இழந்தது.

எமது தரப்பில் 258 போராளிகளையே நாம் இழந்துள்ளோம்; இராணுவம் கூறுவதுபோல 1380 போராளிகளைநாம் இழக்கவில்லை.

ஆனால் இக்குறுகிய காலத்தில் இக் கூட்டுப் பாதுகாப்புப் படைச் செயலகம், 272 இற்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றுள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் 174 தமிழர்களும், யாழ்ப்பாணத்தில் 46 தமிழர்களும், திருக்கோணமலையில் 20 தமிழர்களும், வன்னியில் 30 தமிழர்களும், மன்

## யூன் 16 முதல் ஓகஸ்ட் 10 வரையான 56 நாட்களில்

★ அதி உயர்நிலை அதிகாரிகள் உட்பட 311 இற்கும் அதிகமான சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ 208 ஆயுதங்கள் சிங்களப் படையிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

★ சீனத் தயாரிப்பான தாங்கிகள், தென்னாபிரிக்கத் தயாரிப்பான 'பவள்' கவச ஊர்திகள் உட்பட, 17 இராணுவ வண்டிகள் தகர்க்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன.

★ இக் காலப்பகுதிக்குள் எமது 110 போராளிகள் வீரச்சாவை அணைத்துக் கொண்டனர்.

★ 'பலவேகய - 2' எனப் பெயரிட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றைச் செய்த சிங்களப்படை வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரை, ஒரு இராணுவ வேலியைப் போட்டது இந்தச் சமர் யூன் 28 முதல் 12 நாட்கள் நீடித்தது.

★ சிறீலங்காவின் இராணுவ வானூர்தியான, சீனத் தயாரிப்பான வை – 8 ரக ராட்சத விமானம் ஒன்று - ஆனையிறவுச் சமரின்போது நடு வானிலேயே நொருக்கப்பட்டது.

★ 08 - 08 - 1992 அன்று, யாழ். அராலிப் பகுதியில் - சிங்களப் படையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவி - எமது 'சிறப்பு வேவுப் பிரிவு' நடாத்திய நிலக் கண்ணிவெடித் தாக்குதலில், சிறீலங்கா படைத்துறையின் வட பிராந்திய உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் விபரம் :

- வட பிராந்திய ஆணைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ
- கடற்படையின் வடபிராந்திய தளபதி கொமடோர் மொகான் ஜயமகா
- யாழ். பிராந்தியத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன
- லெப்ரினன்ற் கேணல் ஆரியரத்ன
- லெப்ரினன்ற் கேணல் பலிப்பான
- லெப்ரினன்ற் கேணல் ஸ்ரீபன்
- மேஜர் அல்விஸ்
- கடற்படை லெப்ரினன்ற் லங்காதிலக
- கடற்படை லெப்ரினன்ற் விஜயபுர
- படைவீரர் விக்கிரமரத்ன

# தென்னா......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும், பல வருடங்களிற்குப் பிறகு சர்வதேச விளையாட்டுக்களிலும் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றும் வாய்ப்பை,

தென்னாபிரிக்க வெள்ளை இனவெறி அரசு பெற்றுக்கொண்டது.

சர்வதேச சமூகத்தின் மத்தியில், மீண்டும் தென்னாபிரிக்க அரசைக் கொண்டுவந்துவிடுவது என்ற திரு. டி. கிளார்கின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால், கறுப்பினத்தவர்களின் ஆட்சியை தென்னாபிரிக்காவில் நிறுவுவது என்ற ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் நோக்கம், நிறைவேறவேயில்லை.

## எப்படி இது நடந்தது?

இணங்கிப் போவதைப்போல நடிப்பதன்மூலம் மக்கள் போராட்டத்தை மழுங்கடிக்கக்கூடிய புதிய தந்திரோபாயத்தை, தென்னாபிரிக்க அரசு கடைப்பிடித்துக் கொண்டிருந்தது. அதில் ஒரு யுக்தியாக கறுப்பின மக்கள் மத்தியில் ஊடுருவி, அவர்கள் மத்தியில் இருந்த இனக்குழுவாத உணர்வை (tribalism) தூண்டி மோதல்களை உருவாக்குவதில் வெற்றி கண்டனர்.

கறுப்பினத்தவர்களின் மத்தியில் கலகம் வெடித்தது.

இக்கலவரங்களில் வெள்ளை இனத்தவர்களான தென்னாபிரிக்கப் படைவீரர்களும் பங்குகொண்டதாக கண்கண்ட சாட்சிகள் கூறின.

கலகத்தைத் தூண்டிய பாதுகாப்புப்படை வீரர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும்படி ஆபிரிக்க தேசியகொங்கிரஸ் விடுத்த கோரிக்கையை, தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் நிராகரித்தார்.

இந்தக்கலவரம் கறுப்பினத்தவர்கள் மத்தியில் நடந்த குழுமோதல்: இதற்கும் பாதுகாப்புப் படைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என, ஜனாதிபதி மறுத்துவிட்டார். அத்துடன், கடந்த இரண்டு ஆண்டுகளில் கறுப்பின மக்கள் மத்தியில் நடந்த குழுமோதல்களில் சுமார் ஆறாயிரம் கறுப்பர்கள் கொல்லப்பட்டுள்ளனர்என்று, கறுப்பினத்தவர்களின் படுகொலைகளுக்கு கறுப்பினத்தவரையே குற்றம் சாட்டினார்.

ஆனால் உண்மை என்னவெனில், இக்கலவரத்துக்கு மூலகாரணரும்-சூத்திரதாரிகளும் -இந்த வெள்ளை ஆட்சியாளர்களே ஆவர்.

மாற்றங்கள் தொடர்பான போலிப் பேச்சுவார்த்தைகளும், தென்னாபிரிக்க அரசின் உண்மை நடவடிக்கைகளும், வெள்ளை இனவெறி அரசின் கபட இராஜதந்திரத்தை எடுத்துக்காட்டி உள்ளன.

மாற்றங்களை உருவாக்க முயலும் பேச்சுவார்த்தைகள் இறுதியில் தோல்வியில் முடியவேண்டும் என்பதற்காக, ஏற்கமுடியாததும் நடைமுறைப்படுத்த முடியாததுமான திட்டங்களை வெள்ளை அரசு கபட நோக்கத்துடன் முன்வைத்தது. அத்துடன் இப்பேச்சுக்களைக் குழப்பக்கூடிய விதத்தில் மறைமுகமாக சில சதி நடவடிக்கைகளையும் செய்தது.

இதனால், ஒருகட்டத்தில் பேச்சுக்களைத் தொடர்ந்தும் நடாத்த முடியாதநிலை எழுந்தது.

இது வெள்ளையர்கள் திட்டமிட்டுச்செய்த தந்திரோபாயத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

அதாவது வெளிஉலகிற்கு சமாதானப் பிரியர்களைப் போலக் காட்டி, அதேவேளை பேச்சுக்களை முறிப்பதற்குரிய சதிகளை தென்னாபிரிக்க வெள்ளையர் அரசு நாசூக்காகச் செய்தது.

பேச்சுக்கள் முறிவுற்றபோது இம்முறிவிற்கான காரணம் கறுப்பினத்தவர்கள்தான் என, உலகிற்குக் காட்டியது.

இவ்வித இராஜதந்திர சூட்சுமங்களுடன் கடந்த யூன் மாதம் கறுப்பின மக்கள் மத்தியில் ஒரு இரத்தக்களரியைத் தோற்றுவித்ததன் மூலம், இதே வெள்ளை அரசு தனது சுயரூபத்தை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டது.

இந்த இரத்தக்களரியில் 39 கறுப்பர்கள் கொல்லப்பட்டனர்.

சமரச முயற்சிகள்மூலம் தென்னாபிரிக்காவில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்று கறுப்பினமக்கள் கொண்ட நம்பிக்கை, இனப்படுகொலைச் சம்பவத்துடன் இல்லாமல் போய்விட்டது.

இந்த நிகழ்வுகளால், வெள்ளை இனவெறி அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த நெல்சன் மண்டேலா, தனது மக்களின் கோபாவேசத்திற்கு முகங்கொடுக்க வேண்டிவந்தது.

நெல்சன் மண்டேலா திகைப்புற்றார்; தனது கோடிக்கணக்கான கறுப்பு மக்களின் அடிமை வாழ்வை விடுவிக்க இப்பேச்சுவார்த்தைகள் உதவவில்லை என்பது, இவருக்குப் புலனாயிற்று.

பேச்சுவார்த்தை என்ற போர்வையில் வெள்ளை இனவெறி அரசு நடாத்திய அரசியல் செப்படிவித்தையை, இவர் உணர்ந்துகொண்டார்.

வன்முறையும், படுகொலையும், அவமதிப்பும், இனவெறியும், வறுமையும் தென்னாபிரிக்க மக்களின் தலைவிதியாகவே தொடர்ந்தது.

இந்த நிலையில், ஏனைய ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் தலைவர்களுடன் நெல்சன் மண்டேலா கலந்தாலோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்தார்.

அதாவது, காத்திரமான நடவடிக்கைகளை வெள்ளை இன அரசு நடமுறைப்படுத்திக் காட்டும்வரை, நடந்துவந்த பேச்சுக்களை மேலும் தொடர்வதில்லை என முடிவெடுக்கப்பட்டது

பேச்சுக்கள் - சமரசங்கள் மூலம் கறுப்பின மக்கள் தமது அரசியல் சுதந்திரத்தை வென்தெடுக்க முடியாது என்பதை, மீண்டும் ஒருமுறை கறுப்பின மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து தென்னாபிர்க்க கறுப்பின மக்கள் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தத் தொடங்கியுள்ளனர். வெள்ளை இனவெறி அரசின் அரசியல செப்படிவித்தையை எதிர்த்து வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் பாரிய அளவில் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன.

தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும் வகையில், சாத்தியமான நடைமுறைகளை வெள்ளையர் அரசு தொடங்கும் வரை, எந்தவித அரசியல் சமரசத்துக்கும் இடமில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. ❋

# அழியாத......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அவள் படுத்திட்டாள். விடிய எழும்பி நீங்கள் வந்ததை அறிஞ்சா தன்னை எழுப்பேலை எண்டு சண்டை பிடிப்பாள்" 'என்றாள் அம்மா. அவர்களில் ஒருவன் விஜிக்கு அருகில் சென்றான். அவளது முகத்தில் படர்ந்திருந்த தலைமயிரை விலக்கிவிட்டு, கன்னத்தைத் தடவியவன் குனிந்து நெற்றியில் முத்தமிட்டான்.

அவர்கள் இருளில் கரைந்து போனார்கள். எங்கு சென்றார்கள்......? அது யாருக்குத் தெரியும்! ஆனால் அவர்கள் எங்கும் இருந்தார்கள்.

நாட்கள் கடந்தன. அப்பா இயல்புக்கு வந்திருந்தார். விஜிதா பள்ளிக் கூடத்திற்குச் செல்லத் தொடங்கியிருந்தாள். அம்மா ஆறுதலாக அப்பாவிற்குப் பக்கத்திலிருந்து நீண்ட நேரம் கதைத்தாள். துயரத்திற்குப் பின்பு வந்த அந்த நாட்கள் மகிழ்ச்சியாகத்தான் இருந்தன. ஆனால்...... மகிழ்ச்சியான பொழுதுகள்தான் நீடிப்பதில்லையே ...!

அப்பா விடுதலையாகி மூன்றாவது நாள் இரவு. இல்லை அது நடுச்சாமமாக இருக்க வேண்டும். கதவில் தட்டும் சத்தம் கேட்டது.

"அக்கா"

இதயம் படபடத்தது, 'ஆரது......?' இந்தத் தேசத்தின் வாழ்வுக்காக, பேய்களுக்கு நடுவில், இரவுப் பறவைகள்போன்று - இருட்டில் உலவும் அவர்கள் தானா......?' மிக நீண்ட அமைதி......

அமைதியைச் சிதைத்துக் கொண்டு கதவில் பலமான உதை ஒன்று விழுந்தது. அது போராளிகளில்லை. சந்தேகமறத் தெரிந்தது. அது அவர்களே இல்லை.

"தேசவிரோதிகள்...... திரும்பவும் வந்திட்டாங்கள்" - அப்பா முணுமுணுத்தார்.

கதவு சத்தத்துடன் விலகியது.

"அய்...... யோ...... அவரை விடுங்கோ" அம்மா முன்னால் பாய்ந்தாள், ஆனால் அவளின் தலைமயிரைப் பிடித்திழுத்த ஒருவன் அவளை இழுத்தெறிந்தான்.

"போடி...... எளிய......" அந்த மிருகத்தின் வார்த்தைகள் அவனை விடக் கொடியதாக இருந்தன.

அவர்கள் அப்பாவை இழுத்துக் கொண்டு சென்றார்கள். அம்மாவின் அவலக் குரல், அந்த இரவில் செத்துப் போய்க்கிடந்த கிராமத்தின் காற்றில் படர்ந்தது; பலனற்று அழிந்து போனது. அம்மாவின் குரலைத்தவிர மற்றும்படி எல்லாமே அமைதியாக இருந்தது. வேதனை நிறைந்த இதயத்தைப் பாரமாக அமுத்துகின்ற அமைதி ..... நீண்ட நேரமாக.. ... அடச்சீ...... ஏன் இந்த அமைதி அழியுதில்லை. இரவு முழுவதும் ஊளையிடும் இந்த நாய்கள் எல்லாம் எங்கு சென்றன,? எப்போ செத்துத் தொலைத்தன?

▦ ▦

அதே கம்பிச் சுருள்கள், அதே காவல் நிலைகள் ..... அந்நியர்கள், தேசவிரோதிகள்.

அம்மா மீண்டும் நடந்தாள்.

அவர்கள், அப்பா அங்கு இல்லை என்றார்கள்; தமக்குத் தெரியாது: தாங்கள் பிடிக்கவில்லை என்றார்கள்.

அம்மாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது, 'இவர்கள் அவரைச் சாகடித்து விட்டார்களா ..... இருக்காது. இருக்கமுடியாது. அப்படி இருக்கவே கூடாது! அம்மா தவித்தாள்; துடித்தாள்.

மறுநாள், இன்றாவது அவர்கள் அப்பாவைக் காட்டமாட்டார்களா......?' அம்மா வாசலில் வதங்கிக்கிடந்தாள், பதிலில்லை. அவள் அங்கு மனிதர்களைத் தேடினாள்; தேடித் தேடி களைத்தாள். பாலைவனத்தில் தண்ணீரைத் தேடும் அவளுக்காக இரக்கப்பட, அங்கு யார் இருந்தார்கள்?

மூன்றாவது நாள். வாசலில் நின்றவன் "காட்டலாம்" என்றான். ஆனால் அவனின் வார்த்தைகளில் வன்மம் தொனித்தது. நேரம் கடந்து கொண்டிருந்தது. அவனே திருப்பத் திருப்ப "காட்டலாம், காட்டலாம்" என்றான்.

சூரியன் நடுவானிற்கு வந்த நேரம். அப்போதுதான் அவர்கள் யாரோ ஒருவரை அழைத்து வந்தார்கள்.

'ஆரது...... அப்பாவா......?' தலைமயிர் வழிக்கப்பட்டு...... உடலெல்லாம் காயங்களுடன்...... நம்ப முடியாமல் நெஞ்சம் திகைத்தது. 'அய்யோ...... அது அவரேதான்' விஜியை இறக்கிவிட்டு அப்பாவிடம் ஓடினாள் அம்மா.

"ஓடு......, ஓடடா" நிற்கவே முடியாத அந்த மனிதரை ஒருவன் ஓடச் சொன்னான்.

அவர் ஓடினார், விழுந்தார், எழுந்து ஓடமுயன்றார். துப்பாக்கிகள் சடசடத்தன.

"அய்யோ அவரைச் சுடாதீங்கோ". அம்மா அப்பாவிடம் ஓடினாள். உயிரைக் காப்பாற்ற முயலும் இறுதிக் கணங்கள்...... அப்பா இயன்ற மட்டும் சக்தியைத் திரட்டி ஓடினார்.

மறைவாக ஒரு மதிற் சுவர். அவர்கள் சுட்டார்கள; சுட்டுக் கொண்டே ஓடினார்கள்.

முதலாவது கம்பிச்சுருள்..... இதென்ன கொடுமை. அந்த முள்ளுக் கம்பிக்குள் அப்பா...... துப்பாக்கிகள் தொடர்ந்து இயங்கின.

அம்மா ஓடினாள், "ஐயோ...... சுடாதீங்கோ...... சுடாதீங்கோ" அவள் கத்திக் கதறிக்கொண்டே ஓடினாள்.

அப்பா நிமிர்ந்தார். அம்மாவைப் பார்த்து கையை அசைத்து ஏதோ சொல்ல முயன்றார். முடியவில்லை. விழுந்தார்; மீண்டும் தலையை நிமிர்த்திப் பார்க்க முயன்றார்.

'ஆள் இன்னும் முடியேலை'. நெஞ்சில் அழுத்திய துப்பாக்கி ஒன்று இயங்கி ஓய்ந்தது.

அம்மா அப்பாவிடம் ஓடிக் கொண்டிருந்தாள். அவர்கள - அந்த மிருகங்கள் - திரும்பிக் கொண்டிருந்தார்கள். இந்தியர்கள் அனைவரும் வெளியில் வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்

விஜிதாவோ, நடுவெட்டையில் நின்றாள்.

'அப்பாவை இவர்கள் ஏன் சுட்டார்கள்...... சுட்டுவிட்டு ஏன் சிரித்து மகிழ்கிறார்கள்!'

அவளின் - கேள்விக்கு விடை தேவை; அவர்களைக் கடந்து, அப்பாவை நோக்கி மெதுவாக தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். ❋

## கப்டன் சந்தியா......

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தளவு தூரத்துக்கு இவள் நேசித்த மக்கள இவளை நேசித்தார்கள். தான் நேசித்த இந்தத் தேசத்தின் விடியலுக்காக, எங்கள் சந்தியா தன்னை அர்ப்பணித்து விட்டாள்.

18. 06. 1992 அதிகாலை 5.40 மணி, மண்டைதீவு இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலின்போது மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில், கப்டன் சந்தியாவீரச்சாவைத்தழுவிக்கொண்டு விட்டாள். எந்த மண்ணை நேசித்தாளோ அந்த மண்ணின் விடிவுக்கான வித்துக்களைத் தூவிவிட்டுச் சென்றுவிட்டாள்.

ஆம்! தன்னுடைய 'முதல் நன்மைக் கொண்டாட்டத்தின் போது சந்தியாக்காவிடம்தான் நான் கைவிசேடம் வாங்குவேன் என்று ஆசையுடன் காத்திருந்த...... கோட்டை வாயிலில் ஏக்கம் ததும்பிய விழிகளுடன் சந்தியாவைத் தேடி நிற்கின்ற ஒன்பது வயதுச் சிறுவன் ஜோனைப் பார்க்கிறேன்...... எம் மண் விடுவிக்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்பதன் சாட்சியாய்.

— ஜெயா ❋

# பதுக்கல் - ஒரு மக்கள் விரோதச் செயல்

இன்று யாழ். குடாநாடு சிங்கள அரசின் இராணுவ - பொருளாதார முற்றுகையால் இறுக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து, இருக்க இடமில்லாதும் உண்ண உணவில்லாமலும் அல்லலுறுகின்றனர். உணவுப்பொருட்கள் - மருந்து - எரிபொருள் - குழந்தைகள் பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு பெருத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. அண்மையில் வெற்றிலைக்கேணி - ஆனையிறவுப் பகுதியில் சிங்கள அரசு ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, குடாநாட்டிற்கு பொருட்கள் வரும் ஒரே ஒரு பாதையையும் தடைசெய்துள்ளது. இதனால் குடாநாடு பாரிய தொரு உணவு - மருந்து - எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளது.

இவ்விதமாக, திட்டமிட்டு குடாநாட்டு மக்களை சிங்கள அரசு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கிவரும் இந்த வேளையில், சில வர்த்தகர்கள் தங்களிடமிருந்த அத்தியாவசியப் பொருட்களை கொள்ளை இலாபம் கருதிப் பதுக்கி வைத்து, மேலும் மேலும் குடாநாட்டு மக்களுக்கு வேதனையைக் கொடுக்க முயல்கின்றார்கள்.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவதன் மூலம் அப்பொருட்களுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அப்பொருட்களின் விலைகளை வேண்டுமென்று உயரச் செய்து, அதன்பின் அப் பொருட்களை விற்பனை செய்வதன்மூலம் கொள்ளை இலாபத்தைப் பெறும் நோக்குடனேயே, சில வர்த்தகர்களும் - வியாபாரிகளும் பதுக்கலில் ஈடுபடுகின்றார்கள்.

ஆனால் இவ்விதம் மலைபோல் உயர்த்தப்படும் விலையேற்றங்களுக்கு ஈடுகொடுத்து வாழ்க்கைப் போராட்டத்தை நடாத்தக்கூடிய வசதி, இன்று பெரும்பாலான எமது மக்களிடம் இல்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சிங்கள அரசின் இராணுவ - பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியிலும் இப்போராட்டத்திற்கு உறுதி சேர்த்து வரும், மதிப்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரிய எமது மக்கள், எமமிடையே உள்ள ஒரு சில பதுக்கல்காரர்களினாலும் தேவையற்ற துன்பங்களை - பளுக்களைச் சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுகின்றது. இதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

சிங்கள அரசு எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் எமது மக்கள்மீது பொருளாதாரத்தடையைவிதித்து, மக்களைத் துன்புறுத்துகின்றது. அதேபோன்று, எமது மண்ணின் குடிமக்களாகிய சில வர்த்தகர்களும் - வியாபாரிகளும் கொள்ளை இலாபத்தை நோக்காகக்கொண்டு பதுக்கலைச் செய்து, வேறொரு வடிவத்தில் ஒரு பொருளாதாரத் தடையை எமது மக்கள் மீதே விதித்து, மேலும் மக்களைத் துன்புறுத்துகின்றார்கள்.

இவ்விதமாக, பரந்துபட்ட எமது மக்களின் இயல்பான வாழ்வோட்டத்தைச் சுயநல நோக்கிற்காகக் குலைத்து, மக்களை அல்லலுறச் செய்வது, ஒரு மக்கள் விரோதச் செயலாகும்.

கொள்ளை இலாபம் ஒன்றையே நோக்காகக் கொண்டு இவ்விதம் மக்களை வாட்டிவதைக்கும் பதுக்கல் பேர்வழிகள், மக்கள் விரோதக் குற்றத்தைப் புரிந்தவர்கள் ஆகின்றார்கள்.

அத்துடன், பதுக்கலானது எமது விடுதலைப் போராட்டத்தை நேரடியாகவே பாதிக்கும், ஒரு போராட்டவிரோதச் செயலுமாகும்.

எமது மக்களுக்கு - எமது தேசத்திற்கு - எதிரி செய்ய விரும்புவதை வேறு வடிவத்தில், மறைமுகமாக பதுக்கல்காரர்களும் செய்து வருகின்றார்கள்.

பதுக்கல் என்பது உலகநாடுகள் எல்லாவற்றிலும் ஒரு மோசமான மக்கள் விரோதச் செயலாகவே கருதப்பட்டு, பதுக்கல்காரருக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. குறிப்பாகப் போர்க்காலத்தில் பதுக்கலைத் தேசவிரோதக் குற்றமாகப் பிரகடனப்படுத்தி, அதற்கு மரண தண்டனையும் வழங்கப்படுகின்றது. அந்தளவுக்கு சர்வதேச சமூகமே பதுக்கலை ஒரு கொடிய - அநாகரீக - மனிதாபிமானமற்ற குற்றச் செயலாகப் பிரகடனப் படுத்துகின்றது.



பதுக்கலிலிருந்து மீட்கப்பட்ட மண்ணெய், தமிழீழ காவற் துறையினரால் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

**எமது மக்களுக்கு - எமது தேசத்திற்கு - எதிரி செய்ய விரும்புவதை, வேறு வடிவத்தில் பதுக்கல்காரர்கள் செய்கின்றார்கள். இதுவும் மறைமுகமான ஒரு பொருளாதாரத் தடையே.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிராகப் பிரயோகிக்கப்படும் பொருளாதாரத் தடையை, மிக முக்கிய ஒரு ஆயுதமாகக் கருதியே சிங்கள அரசு தமிழ் மக்கள்மீது பயன்படுத்துகின்றது.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாட்டை உண்டாக்கி, அதன்மூலம் பொருட்களின் விலைகளை பலமடங்கு உயரச் செய்து, வாழ்க்கைச் செலவை உச்ச நிலைக்குத் தள்ளி, இதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தைக் கீழிறக்கி, அதன்மூலம் உண்டாகும் அவலமான வாழ்வுக்குக் காரணம் விடுதலைப் போராட்டம்தான் எனச் சொல்லிக்காட்டி, மக்களின் போராட்ட உறுதியை - பற்றைச் சிதைத்து, போராளிகளுக்கும் மக்களுக்குமிடையேயான உறவை உடைத்து, அதன்மூலம் விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதுதான், சிங்கள அரசு பிரயோகிக்கும் பொருளாதாரத் தடையின் முக்கிய அரசியல் நோக்கமாகும். அதே சமயம் இவ் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்கமுடியாத மக்களைப் பட்டினிபோட்டு - நோய்க்குள் துவளவைத்து - மறைமுகமாகத் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதும் சிங்கள அரசின் நோக்கங்களில் ஒன்றாகும்.

அதாவது, சிங்கள அரசு பல்லாண்டுகாலமாகச் செய்துவரும் தமிழ் இனப் படுகொலையின் ஒரு வடிவமதான் தமிழ் மக்கள்மீதான பொருளாதாரத் தடையாகும்

இதேபோன்றதொரு விளைவைக் கொடுக்கும் ஒரு மக்கள் விரோதச் செயல்தான, பதுக்கல் நடவடிக்கையுமாகும்.

தேசாபிமானமற்ற - சுயநலவாதிகளான இப்பதுக்கல்காரர்களுடைய செய்கைகள், சிங்கள அரசிற்கு உதவுவதாகவே உள்ளன.

அதாவது, குடாநாட்டு மக்களுக்குப் பல்வேறு வடிவங்களிலும் கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்து - பட்டினிபோட்டுப் பணியவைத்து - விடுதலைப் போராட்டத்தின் வீரியத்தைச் சிதைக்க முயலும் சிங்கள அரசின் இனவாத நோக்கத்திற்கு, இப் பதுக்கல்காரர்களும் தெரிந்துகொண்டே துணைபோகின்றார்கள்.

இப் பதுக்கல் வேலை அறியாமையாலோ அல்லது தெரியாமல் தற்செயலாகவோ நடைபெறுவதில்லை. இது மக்களிடமிருந்து கொள்ளை இலாபத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, முன்கூட்டியே நன்கு திட்டமிட்டுச் செய்யப்படும், ஒரு மக்கள் விரோதச் செயலாகும்.

இத்தகைய பதுக்கலினால் மருந்து - உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குக் கிடைக்காமல், அவர்கள் நோயுற்று, அல்லது போசாக்கின்மையால தளர்வடைந்து நோயுற்றுச் சாவுகள் நடைபெறுகின்றன. இந்தச் சாவுகள் இயற்கை மரணங்கள் போல் நடைபெற்றுவிடுகின்றன. ஆனால், இந்தச் சாவுகளுக்குக் காரணம் பதுக்கல்காரர்கள்தான். ஆகவே பதுக்கல் என்பது, கொலைக்குற்றத்திற்கு ஒப்பானதாகும்.

போர் தொடங்கிய இந்த இரண்டு வருட காலத்திலும் நாம் பல தடவைகள், பதுக்கலைச் செய்யவேண்டாமென்றும், பொருட்களின் விலைகளை எழுந்தமானமாக உயர்த்தி மக்களைத் துன்புறுத்த வேண்டாமென்றும், பகிரங்க வேண்டுகோள்களை விடுத்து வந்திருக்கின்றோம். ஆனால், கணிசமான வர்த்தகர்களும் - வியாபாரிகளும் எமது வேண்டுகோளிற்குச் செவிசாய்க்கவில்லை. இதனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து மக்களின் பளுவைக் குறைக்கவேண்டி வந்தது இப்போதுதான் முதற்தடவையாக, பதுக்கலுக்கு எதிராக ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சட்ட நடவடிக்கையை காவற்துறைமூலம் எடுத்துள்ளோம் இந்த நடவடிக்கையும்கூட பகிரங்க எச்சரிக்கைகளின் பின்னர்தான் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது குடாநாடெங்கும் தமிழீழ காவற்துறையினர் பதுக்கலை ஒழிக்கும் நடவடிக்கையில், தீவிரமாக இறங்கியுள்ளனர். பதுக்கப்பட்டிருந்த பெருமளவு அத்தியாவசியப் பொருட்களை வெளியே கொண்டுவந்து, நியாயவிலையில் மக்களுக்கு விநியோகிக்கச் செய்கின்றார்கள்; சில பதுக்கல்காரர்களைக் கைதுசெய்து தடுத்தும் வைத்துள்ளனர். இவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

பதுக்கலுக்கு எதிராக தமிழீழ காவற்துறை எடுத்துவரும் தீவிர நடவடிக்கையின் காரணமாக, பல பொருட்களின் விலைகள் இறங்கியுள்ளன. சந்தைகளில் - கடைகளில் - காணாமற்போயிருந்த பல பொருட்கள் மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளன.

இன்று, இந்த மண்ணின் குடிமக்கள் அனைவருக்குமே ஒரு தேசியக் கடமையுள்ளது. இந்த மக்கள் போராட்டத்தை ஆதரித்து வளர்ப்பதும் - இப் போராட்டத்திற்கு தமது பங்களிப்புகளை வழங்குவதுமே அதுவாகும்.

பொருளாதார - உற்பத்தித் தடைகளையும் மீறி, உணவு உற்பத்தி செய்து, பட்டினிப் பேயை விரட்டியடிக்கவேண்டியது எமது விவசாயப் பெருமக்களின் பிரதான கடமையாகும்.

அதேபோன்று, இப் போர்ச் சூழலில் இனப்பற்றோடும் தேசப்பற்றோடும் மனிதாபிமான உணர்வோடும் வியாபாரம் செய்ய வேண்டியது, வர்த்தகர்களினதும் - வியாபாரிகளினதும் தேசியக் கடமையாகும்.

அதே சமயம், எமது வேண்டுகோள்களுக்குச்செவிசாய்த்துதேசாபிமான உணர்வுடன் நேர்மையாக நடந்துகொண்ட வர்த்தகர்களையும் - வியாபாரிகளையும் பாராட்டுகின்றோம்.

*

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்